# ஜாமக்காரன்
# JAMAKKARAN

ஜாமக்காரன் JAMAKKARAN

**(ஜாமக்காரனில்)** எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதை பிடித்துக்கொள்ளுங்கள். 1 தெச. 5:21
ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான். ஆனாலும் அவன் மற்றொருவறாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி. 2:15

**VOLUME - 5 Reg No.TNBIL/2016/70171 ISSUE - 5**
**MAY 2021 TAMIL & MALAYALAM**
**ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=**

Mob.: No. **9894261333** இந்த எண் - **SMS** உபயோகத்துக்காக மட்டும்
0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



கர்த்தருக்குள் அன்பானவர்களே,

உங்கள் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக.

**மே** மாத ஜாமக்காரன் உங்களுக்கு ஜூன் கடைசி வாரத்தில் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

கொரோனா தொற்றிலிருந்து கர்த்தர் என்னை சுகப்படுத்தி **ஆஸ்பத்திரியைவிட்டு** வெளியே கொண்டு வந்து பழையபடி என்னை ஊழியம் செய்ய அனுமதித்ததற்கு கர்த்தருக்கு கோடானுகோடி ஸ்தோத்திரங்கள்.

ஆனால் ஆஸ்பத்திரியில் நான் பட்ட பாடுகள் நரக வேதனையாக அனுபவித்தேன். இத்தனைக்கும் அந்த ஆஸ்பத்திரி என் மகன் **Dr. SAM**மோடு படித்த நண்பனின் சொந்த ஆஸ்பத்திரி ஆகும். டாக்டர்களும் என் மகனின் நண்பர்கள், ஆகவே எந்த ஒரு பயமுமில்லாமல் **தனி அறையில்** சேர்க்கப்பட்டேன்.

என்னை கவனித்த டாக்டர்கள் எல்லாரும் நானும் ஒரு டாக்டர் என்பதால் மிகவும் சிறத்தையோடு என்னை கவனித்தார்கள்.

முதலாவது  எனக்கு ஏற்பட்ட **புதிய அனுபவம்.**

என் அறையில் என்னை கவனிக்க  துணைக்கு என் மனைவியோ என் மகனோ, வேறு யாரும் என்கூட இருந்து உதவிசெய்ய முடியவில்லை, காரணம், கொரோனா வியாதியஸ்தர் அறையில் யாரும் இருக்கக்கூடாது. யாரும் என் அருகே இல்லாத நிலையில் நான் தனிமையில் விடப்பட்டேன். ஒரு வேளை நான் பாத்ரூமில் கீழே விழுந்தாலும்  யாருக்கும் தெரியாது.  கொரோனா அல்லாத மற்ற எந்த வியாதியஸ்ருக்கும் **உதவிக்கு ஒருவர்** கூடஇருக்கலாம். ஆனால் இந்த பயங்கர **கொரோனா வியாதியஸ்தர்** அருகில் மட்டும் யாரும் இருக்கக்கூடாது.

☐ நான் கொரோனா தொற்றில்  ஆஸ்பத்திரியில்  சேர்க்கப்பட்டுள்ளேன் என்ற விவரம் அறிந்தவுடன்  **ஒரே ஒரு நபர்** தான் என்னை தேடி எனக்காக ஜெபிக்க என் அறைக்கு வந்தார். எங்கள் குடும்ப நண்பரும்  சேலத்தில் பிரபல டாக்டருமான **Dr.  சங்கர், M.S., D.G.O.**  இவர் நல்ல ஆத்தம ஆதாயம் செய்பவர்.  மெடிக்கல் கல்லூரியில்  ஏராளமான மாணவர்களை கிறிஸ்துக்கு நேராக  வழி நடத்தியவர். எந்த ஆப்பரேஷன் செய்தாலும் கையில் கத்தியை எடுத்தவுடன்  **மற்ற டாக்டர்களுக்கு முன்பாக**  தைரியமாக **இயேசு கிறிஸ்துவிடம்**  சத்தமாக ஜெபித்த பின்தான் ஆப்பரேஷன் செய்ய துடங்குவார். கிறிஸ்துவோடு  அத்தனை வைராக்கியம் உள்ளவர்.

அவர்தான் எனக்காக முதல் நாளில் ஜெபிக்க வந்தவர். இத்தனைக்கும் சந்திரனில் இறங்கும் **ஆராய்ச்சியாளனைபபோல அவர் சகல பாதுகாப்பு  கவசங்களை அனிந்து,** முகம் தெரியாத அளவு தலையிலிருந்து பாதம்வரை கொரோனாவுக்காக உருவாக்கிய **உடையுடன்**  என் அறைக்கே வந்துவிட்டார். எனக்கு வைத்தியம் செய்யும் டாக்டர்கள் ஒருவர்கூட கொரோனா வார்டுக்கு என்னை நேரில் வந்து பார்க்க வந்ததில்லை, ஒரு **கண்ணாடி  அறைக்குள்** டாக்டர்கள் என்னை விசாரிப்பார்கள். நான் **மைக்கில்** பதில் சொல்வேன். இப்படி எந்த டாக்டரும்  **கொரோனா வார்டின்** உள்ளே வராத சூழ்நிலையில் இத்தனை பெரிய  பாதுகாப்பு கவசங்களுடன்  **Dr. சங்கர்** அவர்கள் என் அறைக்கு வந்து **அவர்** என்க்காக ஜெபிக்க,  **நான்** அவருக்காக ஜெபித்து அனுப்பினேன். அதன் விளைவு என்னை சந்தித்த **மறுநாளே** அவர் **கொரோனா தொற்றால்** பாதிக்கப்பட்டு வியாதி படுக்கையானார்.  தன் வீட்டிலேயே தானே  வைத்தியம் செய்து தன்னை **தனிமைப் படுத்திக்கொண்டார்.** அவர் **மனைவியும்**  பிரபல  டாக்டராகும்.  அவர்தான் வேளாவேலைக்கு மருந்து கொடுப்பதும், ஆகாரம் கொடுப்பதுவதுமாகும்.  தன் மகனை **கணவர் அருகே** போகாமல் பார்த்துக்கொண்டார். அதன் விளைவு  அவர் **மனைவியும்** கொரோனா தொற்றில் **படுத்த படுக்கையானார். இலவசமாய் பெற்றீர்கள் –இலவசமாய்**

**கொடுங்கள்** என்ற வசனத்தைபோல ஒருவர்பின் ஒருவராக கொரோனா தொற்றால் இருவரும் படுத்துவிட்டார்கள்.

இப்படிப்பட்ட பயங்கர கெரோனா தொற்றால் எனக்கு வைத்தியம் செய்த 3 டாக்டர்களும் என்னை சந்தித்துப்பேச என்அறைக்கு நான் டிஸ்சார்ஜ் ஆகும் வரை வரவில்லை. நான் சுகம்பெற்று திரும்பும் வரை எந்த டாக்டரும் என்னை தொட்டும் பார்க்கவில்லை. **மரண தருவாயில்** உள்ளவர்களை மட்டும் அந்த டாக்டர்கள் பார்க்க வருவார்கள் என்று கேள்விப்பட்டேன்.

இப்படிப்பட்ட **தனிமையும்** மூச்சுவிட முடியாத **என் நிலையும்** என்னை மிகவும இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டு சோர்ந்துபோனேன்.

- ☐ இதில் மிகப் பெரிய **கொடுமை** என்னவென்றால் ஒவ்வொரு நாளும் 5 முறை நரம்பிலிருந்து இரத்தம் எடுக்க நர்ஸ்கள் வருவார்கள். அவர்கள் **படுத்திய பாடுதான்** என்னால் சகிக்க முடியாமல் போனது. இனி யாரும் என்னிடம் இரத்தம் எடுக்கவேண்டாம். நரம்பிலிருந்து இரத்தம் எடுக்க தெரிந்தவர் மட்டும் வந்தால் நான் அனுமதிப்பேன் என்றேன். உடனே டாக்டர்களுக்கு என்னைப்பற்றி **புகார் போனது.** டாக்டர் புஷ்பராஜ் அவர்கள் எங்களோடு **ஒத்துழைக்க மறுக்கிறார்** என்றார்கள். உடனே டாக்டர் என்னோடு பேச தொலைபேசியில் அழைத்தார். நான் விவரம் கூறினேன். இங்குள்ள யாருக்கும நரம்பிலிருந்து இரத்தம் எடுக்க தெரியவில்லை. நரம்புகிடைக்காமல் ஊசியை நுழைத்து கிளரி, குடைந்து **நரம்பை தேடுகிறார்கள்.** இரண்டு கைகளிலும் இரத்தம் எடுத்த இடத்தில் **நீல நிறமாகிவிட்டது.** டாக்டர்களிடம் நான் சற்று கோபமாகவே கேட்டேன். என்ன ஆஸ்பத்திரி நடத்துகிறீர்கள்? அரசாங்க ஆஸ்பத்திரியில்கூட அருமையாக இரத்தம் எடுப்பதை பார்த்திருக்கிறேன். ஆனால், இங்கு யாருக்கும் இரத்தம் எடுக்க தெரியவில்லையே என்றேன். அப்போதுதான் அவர் மிகப் பணிவாக அந்த சம்பவத்துக்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டார். மேலும் சேலத்திலேயே மிகவும் பிரசித்திபெற்ற இந்த முழு ஆஸ்பத்திரியிலும் வெரும் **கொரோனா வியாதியஸ்தரை** மட்டும்தான் அனுமதித்துள்ளார்கள். வேறு வியாதியஸ்தர்களை அனுமதிப்பதில்லை.

500 படுக்கைகளும் **கொரோனா** வியாதியஸ்தரால் நிறைந்துள்ளதால் நன்கு படித்த **அனுபவமுள்ள நர்ஸ்கள்** எல்லாரும் **சம்பளம்கூட வாங்காமல்** வீட்டுக்கு சென்றுவிட்டார்கள். ஆஸ்பத்திரியில் சம்பளமே கொடுக்காவிட்டாலும் பரவலாயில்லை, உடனே வீட்டுக்கு வந்துவிடு என்று **பெற்றோர்கள்** அவர்களை அழைத்துக்கொண்டதால் பயிற்சி பெற்ற நர்ஸ்கள் யாரும் இல்லை, அதனால் அதே ஆஸ்பத்திரியில் **நர்ஸ் கல்லூரியில்** படிக்கும் பிள்ளைகளை கொரோனா வார்டுக்கு இரண்டு பேராக அனுப்பி

அவர்கள்தான் இப்போது வேலை பார்க்கிறார்கள். இவர்களுக்கு **செயல்முறை** பயிற்சியில்லை. அதனால்தான் நரம்பு ஊசி போட தடுமாறுகிறார்கள் என்று அந்த டாக்டர் கூறினார்.

அப்படியானால் நாளை முதல் **நான் கூறுவதை போல்** நர்சுகள் கேட்க வேண்டும். அவர்கள் சொல்வதுபோல் நான் இரத்தம் எடுக்க அனுமதிக்கமாட்டேன் என்றேன். அதற்கு டாக்டர்கள் ஒத்துக்கொண்டார்கள். நர்ஸ்களுக்கும் அவர்கள் கட்டளை கொடுத்தார்கள். அதன்பின் அவர்கள் இரத்தம் எடுக்க வரும்போது ஒரு பெல்ட் அல்லது ஒரு கயிறு கொண்டு வந்து அதை கையின் மேல்பகுதியில் கட்டவேண்டும். கையை நான் இறுக்கி மூடிக்கொள்கிறேன். இப்போது **எந்த நரம்பு** நல்ல **இரத்தம் கொண்டு செல்கிறது**. எந்த நரம்பு **அசுத்தம் கொண்டு செல்கிறது** என்பதை சொல்லி கொடுத்து இப்போது ஊசிபோடும் சிறஞ்ஜியை எடுத்து ஊசியின் **நுனியை மட்டும்** நரம்பில் செலுத்துங்கள். இரத்தம் சிரஞ்ஜியில் மேல் நோக்கி வரும் என்று சொல்லிக்கொடுத்தேன். அதன்பின் கொஞ்ஜம்கூட வலியில்லாமல் இரத்தம் எடுத்துக்கெண்டார்கள். உடனே அவர்கள் கூறியதாவது டாக்டர் எங்ளுக்கு எங்கள் நர்ஸ் **கல்லூரியில்கூட** இவ்வளவு அற்புதமாக இந்த எளிய வழியை சொல்லித்தரவில்லை என்று கூறிச் சென்றார்கள். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை நர்ஸ்கள் மாறுவார்கள். புதிய நர்சுகள் முதலில் என் அறைக்கு வந்து மற்ற நர்ஸ் மூலம் விவரங்களை அறிந்து என்னிடமிருந்து இரத்தம் எடுத்தார்கள்.

**அடுத்த பிரச்சனை :** ஒரு கையில் **வைரல் கிருமிக்காக** உள்ள மருந்து பாட்டில் நரம்பு வழியாக ஏற்றி அந்த பாட்டிலை தொங்க விடுவார்கள். அந்த மருந்து தீர்ந்தவுடன் நர்சுகள் பார்த்து அந்த பாட்டில் காலியான உடன் அதில் உள்ள ஒரு கருவியை **அடைத்துவிட்டு** அதே நரம்பில் தொடர்ந்து மருந்தை செலுத்த மற்றொரு பாட்டில் தொங்கவிடுவார்கள். ஆனால் பாட்டில் மருந்து **தீரும்முன்** அந்த பட்டிலை **அடைக்க வேண்டும்**. ஆனால் நர்சுகள் யாரும் வரமாட்டார்கள். அழைப்பு மணியும் அங்கு இல்லை. நான் டாக்டர் ஆனதால் நானே **அந்த டியூபை அடைத்துவிட்டு** அடுத்த பாட்டில் மருந்து செலுத்த நர்ஸ்மாரை அழைக்க வேண்டும்.

போவோர் வருவோரிடம் நர்ஸ்சை கூப்பிடுங்கள் என்று கூறி அனுப்புவேன். ஆனால் ஒரு மணி நேரமானாலும் வரமாட்டார்கள். சீக்கிரம் எல்லா மருந்தும் நரம்புக்குள் சென்றவுடன் பாட்டிலை என் கையிலிருந்து **நீக்கினால்** தான் நான் இரவு **தூங்க முடியும்,** தூக்கத்துக்கு மருந்தும் அந்த பட்டிலிலேயே கலந்துவிட்டனர். ஒரு மணி நேரம் காத்திருந்து பார்த்தும் நர்ஸ் யாரும் வராததால் நானே தொங்கிக்கொண்டிருக்கும் **பாட்டிலை ஸ்டேன்டிலிருந்து கழற்றி** கையில் எடுத்துக்கொண்டு நர்சுகள் அறையை நோக்கி நடந்து அவர்களை கூப்பிட்டேன்.

உடனே பதறியடித்துக்கொண்டு, டாக்டர் இப்படி பாட்டிலுடன் நடந்துவராதீர்கள் . சுற்றிலும் **கேமிரா** இயங்கிக்கொண்டிருக்கிறது. அதை மேல் அதிகாரிகள் கண்டு பிடித்தால் **எங்கள் வேலை போய்விடும்** என்று கெஞ்ஜினார்கள். உடனே அவர்கள் என் அறைக்கு வந்தவுடன் மருந்து பாட்டிலை மாற்ற முயன்றபோது அவர்களிடம் நான் கூறியதாவது, நான் கூறுவதை முதலில் கவனியுங்கள். எனக்கு அந்த பாட்டிலை **டியூப்பிலிருந்து** எப்படி **அடைப்பது** என்பது தெரிந்ததால் **நான் தப்பினேன்.** பக்கத்தில் **வயது முதிர்ந்தவர்** உண்டு. மறுபக்கத்தில் **படிக்காதவர்கள்** உண்டு. அவர்களுக்கு பாட்டில் மருந்து தீர்ந்துபோய் அதை உடனே நீங்கள் அடைக்காவிட்டால் **வெரும் காற்று இருதயத்திற்கு** போனால் உயிருக்கு ஆபத்து உண்டாகும் என்பது தெரியாதா? என்று விளக்கினேன்.

அவர்கள் **அழுது** கொண்டே டாக்டர் இந்த வார்டில் **40 கொரோனா** வியாதியஸ்தர் உண்டு. அத்தனை பேருக்கும் **நரம்பு வழியாக** மருந்து போய் கொண்டிருக்கிறது. நாங்கள் **இரண்டு பேர்தான்** ஓடிஓடி மருந்தை நிறுத்தி வேறு பாட்டிலை இணைக்க வேண்டும். இரவும் பகலும் இரண்டு நாட்கள் தூங்காமல் வேலை செய்கிறோம். எங்களால் எத்தனை வியாயஸ்தரை கவணிக்க முடியம். தயவுசெய்து **எங்களைப்பற்றி புகார்** கொடுத்துவிடாதீர்கள் என்று கெஞ்ஜி கேட்டுக் கொண்டார்கள்.

- ☐ அடுத்தது **மருந்துகள் மாத்திரைகள்** கொடுக்க **காலை** எது கொடுக்கவேண்டும் **மதியம்** எதை கொடுக்க வேண்டும். **ஆகாரத்துக்கு** முன் – பின் எதை கொடுக்கவேண்டும் என்று கூற அவர்களுக்கு தெரியவில்லை. மருந்தை மாற்றி வியாதியஸ்தரே சாப்பிட்டால் அது அந்த வியாதியஸ்ருக்கு ஆபத்தை உண்டாக்குமே! உடனே அவர்களிடம் **நான்கு காலி கவர்களை** கொண்டுவாருங்கள். டாக்டர்கள் கொடுத்த **சார்ட்டை** கொண்டு வாருங்கள். அதில் டாக்டர் மருந்து சாப்பிட வேண்டிய முறையை தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள். அவைகளை அந்த கவரில் **காலை – மாலை, இரவு, சாப்பிடும்முன்** சாப்பிட்டபின் என்று எழுதுங்கள். அதை வியாதியஸ்தரிடம் விளக்கி கொடுத்துவிட்டால் ஒவ்வொரு நேரமும் நீங்கள் நேரில் வந்து கொடுக்கவேண்டியதில்லையே. முதல்நாள் எனக்கு **காலை** கொடுக்கவேண்டிய மாத்திரையை **மதியம் 12 மணிக்குதான்** கொடுத்தீர்கள். இது ஆபத்து அல்லவா என்று அவர்களுக்கு ஒரு வகுப்பே நடத்தினேன்.
- ☐ அடுத்த ஆபத்து 3வது நாள் எனக்கு **ஆக்ஜிஜன்** (பிரண வாயு) மிகவும் குறைந்தது. உடனே நர்சுகள் பிராண வாயு பொருத்தும் கருவியை என் மூக்கில் பொறுத்தினார்கள். அன்று இரவு 2 மணி **பிராண வாயு** கருவி வேலை செய்யவில்லை. நர்ஸ்மார் என்னென்னவோ செய்து பார்த்தார்கள். அந்த டியூபில் **கூடான வெறும் காற்றுதான்** மூக்குக்குள் சென்றது. பக்கத்தில் வைக்கப்பட்ட **பாட்டில் வழியே** காற்று குமிழ் வரவில்லை.

**ஆக்ஜிஜன்** அந்த ஆஸ்பத்திரியின் **பொது இடத்திலிருந்து** ஒவ்வொரு **அறைக்கும்** படுக்கைக்கும் அருகே உள்ள சுவரில் பதியப்பட்ட டியூபின் மூலம் சப்ளை ஆகிறது. ஒரு மணி நேரம் போராடியும் அவர்களால் அந்த கருவியை சரிசெய்ய முடியவில்லை. இரவும்–பகலும் வீட்டிற்கு போகாமல் என் மகன் **காரிலேயே** படுத்து உறங்கிக்கொண்டிருந்தார். உடனே என் மகன் **Dr.சாம்** அவர்களுக்கு தொலைபேசி மூலம் விவரம் தெரிவித்தேன். உடனே மகன் பதறியடித்து **டூட்டி டாக்டரிடம்** விவரம் கூறினார். அவர் முழு அஸ்பத்திரிக்கும் ஒரே ஒரு **டெக்னிஷியன்தான்** உண்டு. உடனே அழைத்து அனுப்பிகிறேன் என்றார். அவரும் வந்தார் அவராலும் அந்த கருவியை ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் சொன்னேன் **பிரண வாயு** இல்லாமல் **வெறும் சூடுகாற்றை** எப்படி **நுரையீரலுக்கு அனுப்புவது.** உடனே அவர்கள் டாக்டர் **நாளை** சரிசெய்துவிடுகிறோம் என்றார். இது சரிபட்டு வராது. **பிராண வாயு இல்லாமல்** நான் செத்துவிடுவேன். இன்று இரவே எனக்கு ஆக்ஸிஜன் வேண்டும் என்றேன்.

ஆகவே முதன் முறையாக அன்று இரவு 3 மணிக்கு என்னை கவனிக்கும் **பெரிய டாக்டருக்கு** அந்த நடு இரவு **தொலைபேசியில்** விவரம் கூறினேன். உடனே டாக்டர் அந்த டெக்னிஷியனுடனும் டூட்டி டாக்கடரிடமும் கூறி **தற்காலிகமாக சிலிண்டர் மூலமாக** சிறய அளவிலாவது **சிறிய டியூப்** வழியே **பிராணவாயு செல்ல** ஏற்பாடு செய்துவிட்டு எனக்கு அறிவிக்க சேண்டும் என்றார். அப்படி அவர்கள் செய்ததால் **மூச்சு தினரலோடு** விடியற்காலை 3 மணிமுதல் காலை 8 மணி வரை **மிகவும் கஷ்டப்பட்டேன். என்னிடம்** 5½ லட்சம் பணம் வங்கிக்கொண்ட அந்த **மிகப்பெரிய** தனியார் ஆஸ்பத்தியிலேயே லட்சக்கணக்கான பணம் நான் செலவழித்தும் மிக முக்கியமான **பிரண வாயு பிரச்சனை** எனக்கு உண்டானது. என்னை பொருத்தவரை பிராண வாயு எப்படி என்பது எனக்கு தெரிந்ததால் நான் ஓரளவு சமாளித்து உயிர் பிழைத்தேன். ஆனால். என் **பக்கத்து வார்டுகளில்** படிப்பறிவு இல்லாதவர்கள், வயதானவர்களுக்கு, இப்படி நேர்ந்தால் **நிச்சயம் மரணம் உண்டாகும்.** ஒவ்வொரு இரவும் என் அறைக்கு வெளியே ஸ்டச்சரை **தள்ளிக்கொண்டு** ஆட்கள் ஓடும் **சப்தம் கேட்டும்.** அதை கேட்ட உடன் **ஒருவர் இறந்துவிட்டார்.** என்று விளங்கிது. உடனே **ஆம்புலன்ஸ்** அலரல் **சப்தம் கேட்கும்.** நிறைய பேர் **அழும் சப்தமும்** கேட்கும். ஒவ்வொரு இரவும் இப்படி **ஆம்புலன்ஸ் சப்தம்** ஒலிக்கும் போதெல்லாம் . கர்த்தாவே! அவர்களுக்கு ஆறுதல் தாரும் என்று கூறவேன் எனக்கு விவரம் அறிந்ததால் அவ்வப்போது ஆட்களை அழைத்து என் பிரச்சனைகளை சரிபடுத்திக்கொண்டேன். கர்த்தரின் கிருபையால் என்னை காத்துக்கொண்டேன்.

ஆக்சிஜன் வராத வெரும் டியூப்பை மூக்கில் வைத்தால் இறந்துபோகும் வியாதியஸ்தர் கொரோனாவால்தான் **இறந்து போனார்கள்** என்றுதான் உறவினர்களுக்கு அறிவிப்பார்கள். நினைப்பார்கள். **ஆஸ்பத்திரியில் நடக்கும்** தவறுகள் **மருந்துகள்**

**மாற்றிகொடுத்து பிராண வாயு பற்றாகுறையோடு** வெரும் காற்றை மூக்கின் உள்ளே செலுத்தியதால்தான் **வியாதியஸ்தர் மரித்தார்** என்பது வெளி உலகத்துக்கு தெரியாது. இவைகளை குறித்து அறியாத **மக்களின் நிலை** மிகப் பரிதாபம். மரித்தபின் எப்படி மரித்தார் என்று கூற சாட்சி இல்லையே !

ஒருவழியாக கர்த்தர் **என்னை காப்பாற்றி** உயிரோடு **வெளியே கொண்டுவந்தார்.** ஆஸ்பத்திரியில் கெரோனா சிகிச்சை முடிந்தது. இனி விட்டமின் மாத்திரைதான் சாப்பிடவேண்டும். அடுத்தது. கவிழந்து படுத்து செய்யும் **பயிற்சி** இவைகளை நான் வீட்டிலேயே செய்து கொள்வேன். தயவு செய்து என்னை **டிஸ்சார்ஜ்** செய்யுங்கள் என்று நானாக கேட்டு அந்த நரகத்திலிருந்து தப்பினேன். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். உங்கள் எல்லாருடைய ஜெபத்துக்கும் நன்றி. தக்க சமயத்தில் நான் கேட்காமலே நீங்கள் எனக்கு செய்த **பண உதவிக்கும்** அவ்வப்போது என் உடல் முனனேற்றத்தை விசாரித்ததற்கும் மிக்க நன்றி கூறுகிறேன்.

ஏறக்குறைய **இரண்டு மாதங்கள்** என் வீட்டில் உள்ள எல்லா தொலைபேசிகளின் **இணைப்புகளை** துண்டித்தேன். **மகன் Dr. சாம்** அவர்களிடம் என் மனைவியின் மொபைல் கொடுத்திருந்தேன். **உலகமெங்கம்** உள்ளவர்கள் **இந்திய வாசகர்ள்** அந்த கைபேசி மூலம்தான் தொடர்புகொண்டு என்னைபற்றிய விவரம் கேட்பார்கள். அப்பா **ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு வந்த உடன்** உங்களை அழைத்து பேசுவார் என்று என் மகன் பதில் அளித்து உதவினார்.

அதன்பின் என்னை வீட்டில் 1 **மாதம் தனிமையில்** படுக்க வைத்தனர். என்னை **அறையை விட்டு வெளியேவர** அனுமதிக்கவில்லை. என் படுக்கையிலேயே சாப்பாடு – கைக் கழுவுதல் யாவும் நடந்தது. என் மனைவிகூட தூரத்திலிருந்து என்னை பார்ப்பார்கள். தொலைபேசிலேயே ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வோம். என் **மகன்** அல்லது என் **மருமகள்** யாராவது ஒருவர் சாப்பாட்டை என் கட்டிலில் வைத்துவிட்டு போவார்கள். இப்படியாக 1 மாதம் வீட்டிலேயே தனிமை படுத்தப்பட்டேன். வீட்டிலேயே **மூச்சு பயிற்சி** எடுத்துக்கொண்டேன். ஒரு மாதம் கழித்து வீட்டுக்குள் தோட்டத்தில் **நடைபயிற்சி** செய்தேன். கடவுள் கிருபையால் இப்போது **பரிபூரண சுகம்** பெற்று என் அலுவலகத்தில் கடந்த இரண்டு மாதமாக ஊழிய வேலை செய்ய ஆரம்பித்துவிட்டேன்.

- ☐ ஆஸ்பத்திரியில் ஏற்பட்ட அந்த முக்கிய அனுபவமான **பிராண வாயு** (ஆக்ஸிஜன்) கிடைக்காமல் **சூடுகாற்று மாத்திரம்** இரவு முழுவதும் நுரையீரலுக்கு போயிருந்தால் என்ன ஆவது? ஏதோ நான் என்பதால் உடனே டாக்டரை தொலைபேசியில் அந்த நடுராத்திரி 2½ மணிக்கு அழைத்து எனக்கு நடந்த அவலத்தை கூறியதால் சிறிய அளவு

**ஆக்ஸிஜன் டியூபை** பொருத்தி இந்த ஒரு இராத்திரி சமாளித்துக் கொள்ளுங்கள். இன்னும் நான்கு மணி நேரத்தில் **வேறு கருவி** மாற்றி தருகிறோம், மண்ணித்துக் கொள்ளுங்கள் என்று கூறி அனைவரும் சென்றுவிட்டார்கள். காலை வரை தொடர்ந்து குறைந்த ஆக்ஸிஜனில் நான் தவித்த நிலையில் படுத்துக்கிடந்தேன்.

விவரம் அறியாதவர்கள் அந்த டியூபில் வருவது **ஆக்ஸிஜன்** காற்றா அல்லது **வெறும்** காற்றா? என்று அவர்களுக்கு எப்படி தெரியும்? மறுநாள் **ஆக்ஸிஜன்** கொடுத்தும் **ஆள் பிழைக்கவில்லை** என்று சுருக்கமாக கூறிவிடுவார்கள். அதை அந்த குடும்பத்தினரும் நம்பி **பிணத்தை** எடுத்து செல்வார்கள். அவர்கள் **பல லட்சங்கள் அட்வான்ஸாக** ஆஸ்பத்திரிக்கு செலுத்தியது வீண்.

இப்படி **கார்ப்பரேட்** மற்றும் **பெரிய பெரிய** ஆஸ்பத்திரிகளில் இப்படிப்பட்ட **மரணங்கள் தான்** மிக அதிகமாக சர்வசாதரணமாக சம்பவிக்கிறது. ICU அறையாக இருந்தால் **மானிட்டர் கருவி** எல்லாவற்றையும் **பதிவு செய்து** காட்டிக்கொடுத்துவிடும். ஆனால் சாதாரண வார்டில் உள்ள கொரோனா வியாதியஸ்தர்களின் நிலை மிக பரிதாபம். மரித்த பிணம் ஆஸ்பத்திரியில் நடந்த தவறுகளை யாருக்கும் கூற முடியாது.

என் **மகனும்** அந்த மெடிக்கல் காலேஜ் ஆஸ்பத்திரி **முதலாளியும் கல்லூரி நண்பர்கள்** ஆகும். **மகனிடம்** நான் பட்ட கஷ்டங்களின் விவரங்கள் எதுவும் நான் கூறவில்லை, என்னால் அவர்களின் **நட்பு** பாதிக்கப்படும் என்ற ஒரே காரணத்தால் நான் எதையும் கூறவில்லை.

கொரோனா வியாதியஸ்தருக்கும் அவர்கள் குடும்பத்தாருக்கும் இந்த என் **கசப்பான ஆஸ்பத்திரி அனுபவம்** நிச்சயம் பிரயோஜனமாக இருக்கும் என்பதால் இதை எழுதினேன். இந்த நிலையில் **டாக்டர்கள் மேல் எந்த தவரும் இல்லை**. ஆனால் குறிப்பிட்ட அந்த ஆஸ்பத்திரியின் முழுபயிற்சி பெறாத **நர்ஸ்கள்,** சூப்ரவைசர்கள் இவர்களின் **அலட்சியம்.** மேலும் அவர்கள் **ஓய்வு எடுக்க முடியாதபடி** இரவு பகலும் உறங்காமல் சுமார் 40 வியாதியஸ்தரை **ஓடி ஓடி கவணித்ததால்** ஏற்பட்ட **களைப்பு**, **மன அழுத்தம்** இவைகள்தான் அவர்களின் தவறான கவனிப்புக்கு காரணம் ஆகும். அதனால் நீங்கள் வியாதியஸ்தர் யாரையாவது அழைத்துககொண்டு ஆஸ்பத்திரியில் நுழையும் போதே கர்த்தாவே **டாக்டர்கள், செவிலியர்கள்** கண்களில் தயவு கிடைக்கவேண்டும் என்று ஜெபித்து அனுப்புங்கள்.

மனசாட்சியுள்ள **செவிலியர்கள்** தெய்வ பயம் உள்ள **செவிலியர்கள்** ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் உண்டு. அவர்கள் களைத்து போனாலும் என் அலட்சியத்தாலோ, வேளை பளு காரணமாகவோ ஒரு **உயிர்கூட போய்விடக்கூடாதே** என்ற நல்ல சிந்தையில்

நோயாளிகளை கருத்தாய் கவணிக்கிறவர்கள் நிறையவே உண்டு. அவர்களுக்காக ஜெபிப்போம்.

**கொரோனா படுக்கையில்** நான் கிடந்தபோது எனக்காக ஜெபித்தவர்கள், **விசாரித்தவர்கள்**, **பணமும் அனுப்பி** உதவியவர்கள் அத்தனை பேருக்கும் என் உளமார நன்றியை கூறுகிறேன்.

☐ கர்த்தர் எனக்கு கொடுத்த **ஊழிய திட்டமும்**, என் ஊழியமும் **முடிவை எட்டியது** என்றுதான் அன்று ஆஸ்பத்திரியில் நான் நினைத்தேன். ஆனால் கர்த்தர் ஏனோ **என் ஆயுளை** நீட்டித்தந்து என் **ஊழியத்தின் எல்லையையும்** பெருகசெய்துள்ளார். கர்த்தரின் நோக்கம் **என் மூலமாய் ஜாமக்காரன்** வழியாக தொடர்ந்து **நிறைவேற்ற** கர்த்தர் எனக்கு கிருபை செய்தார். இப்போது கொரோனாவிலிருந்து எனக்கு சுகம் கிடைத்ததற்கு பின் **முன்பைவிட** முழு வேகத்தில் தமிழ் & **மலையாளம்** ஜாமக்ாரன் பத்திரிகை வழியாகவும் **தொலைபேசி** வழியாகவும் **email வழியாகவும்** கடிதங்கள் மூலமாகவும் காலை முதல் 12 மணி வரை ஊழியத்தை தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறேன். **கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.** உங்கள் எல்லாருடைய ஜெபத்துக்கும் காணிக்கைக்கும் மறுபடியும் நன்றி மிக கூறுகிறேன்.

☐ நானும் உங்களுக்காக ஜெபிப்பதை மறக்கவில்லை. உங்கள் யாவரின் **ஜெப குறிப்புகளின் எண்ணிக்கை** கூடிக்கொண்டேயிருக்கிறது. ஜெபத்துக்குபின் **சுகமானவர்கள்,** குடும்ப பிரச்சனையிலிருந்து மாற்றங்களை அனுபவித்தவர்களின் எண்ணிக்கையும் **இரண்டு மடங்காக** கூடியுள்ளது. உங்களை தொட்டவர் **கிறிஸ்து** – சுகமாக்கியவர் கிறிஸ்து – குடும்ப பிரச்சனைகளை சரிபடுத்தினவர் **கிறிஸ்து.** எல்லா **புகழ்ச்சியும்,** நன்றிகளும் **துதிகளும்** கர்த்தருக்கே உரித்தாகுக. ஆமென்

டாக்டர் **புஷ்பராஜ்**

# ONLINE BANKING (NEFT)

## Name : M G E PUSHPARAJ

**STATE BANK OF INDIA**

IFSC CODE - IFSC SBIN0001970 -10764116842 **A/C No: 10764116842**
SWIFT CODE - SBININBB300 **A/C No: 10764116842**

**CANARA BANK - SALEM** (SURAMANGALAM BRANCH)

IFSC CODE - IFSC CNRB0001219- 1219101013622. **A/C No: 1219101013622.**
SWIFT CODE - CNRB0001219 -1219101013622. **A/C No: 1219101013622.**

# பிரதமர் மோடியின் மத வெறி

வட இந்தியாவில் கிறிஸ்துவைப்பற்றி பேசினால் 10 வருட ஜெயில், ஒரு இந்து, கிறிஸ்வ பெண்ணை திருமணம் செய்தால் அடித்தே கொன்றுவிடுகிறார்கள். **வீட்டுக்குள்** இயேசுவின் பாடு மரணங்களைப்பற்றி சினிமாவோ, பைபிள் கதைகளோ பேசினால் அந்த வீட்டையே எரிக்கிறார்கள். உத்திர பிரதேசத்தில் வீட்டு ஜெபம் நடத்தியதற்கு அந்த குடும்பத்தினரை வெளியே இழுத்து வந்து ஊர் நடுவே கணவனையும், மனைவியையும் உடைகளை கிழித்து நீக்கி நிர்வாணமாக்கி கம்பு கொண்டும், மூங்கில் கொண்டும் அவர்களை அடித்தார்கள். இவர்களோ தங்கள் உடலில் ஒரு பொட்டு துணிக்கூட இல்லாமல் நின்ற **நிர்வாண கோலத்திலிருந்து** தங்கள் மானத்தை காத்துக்கொள்ள தங்கள் பிள்ளைகளை சேர்த்து அனைத்து உடலை மறைத்துக்கொண்டனர். இதன் போட்டோவை ஜாமக்காரனில் வெளியிட்டிருந்தேன். பிரதமர் மோடியின் ஜனநாயகத்துக்கு விரோதமான கொள்கையான **ஒரே** நாடு, **ஒரே** மதம் **ஒரே** மொழி என்ற **இந்துத்துவா** கொள்கையினால் **காவி கட்சியினர்** இத்தனை கொடூரமாக கிறிஸ்தவர்களை கொடுமைப்படுத்திக கொண்டிருக்கிறார்கள்.

## மதவெறி



2021 மே மாதம் 23ம் தேதி கல்கத்தாவில் **நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் 125 வது பிறந்த நாள்** விழாவில் **பிரதமர் மோடி** கலந்துகொண்டார். மேற்கு வங்க **முதல்வர் மம்தா** அவர்களும் அதே விழாவில் கலந்துகொண்டார். **முதல்வர் மம்தா** அவர்கள் சொற்பொழிவாற்றி முடிந்த உடன் கடைசியாக **பிரதமர்** பேச வேண்டும். பிரதமர் எழுந்து நின்று தான் பேசும் முன் மக்களைப் பார்த்து கையை உயர்த்தி **ஜெய் ஸ்ரீராம்** B**போல்** என்று கூறி மூன்று முறை **ஜெய் ஸ்ரீராம்** என்று உறக்க கூற மக்களும் **ஜெய் ஸ்ரீராம்** என்றார்கள். உடனே **முதல்வர் மம்தா பேனர்ஜி** அவர்கள் எழுந்து **மைக் அருகில் வந்து** பிரதமர் அவர்கள் மன்னிக்க வேண்டும். இது **இந்து மத பிரச்சார கூட்டம்** அல்ல. இது **மேற்கு வங்க மாநில அரசாங்கம்** நடத்தும் கூட்டமாகும். இதில் **அரசியலும்** பேசக்கூடாது. **மற்ற மத தெய்வங்களைப்பற்றியும்** பேசக்கூடாது என்று உரத்த சத்தத்துடன் கூறி அமர்ந்துவிட்டார்.

அதிர்ந்துபோன **பிரதமர்** கோபப்பட்டு **பிரசங்கம் செய்யாமல்** மேடையைவிட்டு கீழே இறங்கிபுறப்பட்டார். மம்தாவின் கட்சி ஆட்கள் விசில் ஊதி, கைதட்டினார்கள். போலீஸ் **பிரதமருக்கு** பாதுகாப்பு கொடுத்து காரில் ஏற்றினார். மறக்கமுடியாத **பெருத்த அவமானம்** அன்று **பிரதமருக்கு** ஏற்பட்டது. அதன்பின் முதல்வர் மம்மதா அவர்கள் பிரதமரின் கோபத்தை பொருட்படுத்தாது **ஜனகனமன அதி** என்ற தேசிய கீதம் பாடி கூட்டத்தை முடித்தார்.

## மம்தா பேனர்ஜி

இந்திய நாட்டில் இது மாதிரி ஒரு நிகழ்ச்சி நடந்ததாக நான் கேள்விப்பட்டதில்லை. தமிழ்நாட்டில் நடந்த ஒரு கிறிஸ்தவ மேடையில் பிரபலமான ஒருவர் **எல்லா** மதமும் ஒன்று எல்லா தெய்வங்களும் ஒன்று இயேசு மாத்திரம்தான் இரட்சகர் என்று பிரசங்க்கிக்க கூடாது என்று பிரசங்கித்தார். ஆனால் அந்த பெரும் கூட்டத்தில் மேடையில அமர்ந்திருந்த ஒரு பிஷப்கூட அவர் பேசியது தவறு என்று சுட்டிக்காட்ட தைரியப்படவில்லை. மேடையில் ஏராளமான **ஆயர்கள்** உண்டு. **பிஷப்மார்கள்** அமர்ந்துள்ளனர். எல்லாரும் பிடித்து வைத்த மண்போல் அமர்ந்திருந்தார்கள். கடைசியாக **ஆசீர்வாத ஜெபம்** செய்த **பிஷப் கூட அந்த நபர் செய்த** பிரசங்கம் தவறு கிறிஸ்தவம் **ஒரு மதம் அல்ல, எல்லா** தெய்வமும் **ஒன்றல்ல,** ஒரே ஒரு தெய்வம் உண்டு. **அன்டசராசரங்களையும்** உணடாக்கிய **இயேசுவே** அவர். அவர்தான் **நானே** வழி, **நானே** ஜீவன், **நானே** சத்தியம், **நானே** வாசல் என்றார். மேலும் இந்த (இயேசு என்னும்) வாசல் வழியாக அல்லாது வேறு எந்த மார்கத்திலும் **பரலோகம்** செல்ல வழியில்லை என்று கூறியிருந்தால் அந்த கூட்டத்தில் கலந்துகொண்ட அத்தனைபேருக்கும் **சுவிசேஷம்** அறிவித்த ஆசீர்வாதம் உண்டாயிருக்குமே. **நல்ல சந்தர்பத்**தை அந்த பிஷப்மார்கள் நழுவவிட்டார்கள். ஒரு சாதாரண வி**தவை பெண்ணான அந்த பிராமண பெண் அவரும் இந்து மதத்தை சார்ந்தவர்தான் அந்த முதல்வர் மம்தா** அம்மையாருக்கு இருந்த **தைரியம்கூட** அந்த கிறிஸ்தவ மேடையில் இருந்த யாருக்கும் இல்லாமல் போனது பெரும் தலைகுனிவாகும்.

- ☐ மதுரை **பசுமலையில்** ஒரு பெரிய மைதானத்தில் **என் சுவிசேஷ கூட்டம்** நடந்தது. பல ஆயர்கள், ஊழியர்கள் மேடையில் அமர்ந்திருந்தனர். அன்றைய கூட்டத்துக்கு தலைமை தாங்கியவர் ஒரு பிரபல **வேதாகம கல்லூரியின் பிரின்சிபால்** ஆவார். மெத்த படித்த படிப்பாளி அவர் எழுந்து தன் தலைமை உரையில் என் பெயரை கூறி உயர்த்தி, புகழ்த்தி, வாழ்த்தி பேசினார். அதன்பின் தன் பிரசங்கம் ஆரம்பித்தார். அவர் தன் பிரசங்கத்தில் இன்று எல்லாரும் மிஷனரி பணி என்று வட இந்தியா காடுகளுக்கும் மலைகளுக்கும் போகிறார்கள். ஆனால் நாம் வணங்கும் இயேசு கூறிய கட்டளைக்கு இன்று வரை யாரும்

கீழ்படியவில்லை. இயேசு சொன்னார், நீங்கள் புறப்பட்டுப்போய் **சகல சிருஷ்டிகளுக்கும்,** சுவிசேஷம் அறிவியுங்கள் என்றார். அதாவது ஆண்டவர் **மனிதனை** மட்டும் உண்டாக்கவில்லை. மரம் செடி கொடிகளையும் உண்டாக்கினார், அந்த **மரத்துக்கு உயிர் இருக்கிறது.** அதனால்தான் **சகல சிரிஷ்டிகளுக்கும்** சுவிசேஷம் அறிவியுங்கள் என்றார்.

நம்மில் யாராவது என்றாவது **ஒரு மரத்துக்கு** முன் நின்று **சுவிசேஷம்** அறிவித்ததுண்டா.? **ஆண்டவரின் வார்த்தை** செத்துப்போன **லாசருவின் காதுக்குள்** செல்லும்போது **மரத்துக்கு ஏன் போகாது ?** இங்கே இருக்கும் மரங்களுக்கும் செடிகளுக்கும் முதலில் சுவிசேஷம் சொல்லுவோம் என்று கூறி பிரசங்கத்தை முடித்தார். எனக்கு இருப்பு கொள்ளவில்லை., கோபம் தாளவில்லை. எப்போது என் பிரசங்க நேரம் வரும் என்று பொருமை இழந்து காத்திருந்தேன். கானிக்கை பாடல் பாடி கடைசி பிரசங்கமாக என்னை பிரசங்கிக்க அழைத்தார்கள். நான் அன்று ஆரம்பத்தில் எந்த பாடலும் பாடவில்லை, ஜெபமும் செய்யவில்லை. நேரிடையாக **முகவுரை** செய்தியாக பேசுகிறேன் என்று பேச ஆரமபித்தேன்.

அன்பானவர்களே ! தலைமை தாங்கிய **பிரின்சிபால்** அவர்கள் ஒரு பெரும் தவறான கருத்தை இங்கு பதிவு செய்தார்.அதன் மறுப்பாக நான் பேச போகும் சத்தியத்தை நான் இப்போது பேசும் விஷயத்தைக் குறித்து கோபப்படாமல் நான் பிரசங்கம் செய்து ஜெபித்து முடித்தபின் நான் பேசிய கருத்துக்கு **மாற்று** கருத்து இருந்தால் தயவுசெய்து அதை கூறும்படி கேட்டுக்கொள்கிறேன். இதை நீங்கள் **சவாலாக** கருதினாலும் சரி என்று கூறி நான் பிரசங்கிக்க ஆரம்பித்தேன். பிரின்சிபால் ஐயா அவர்கள் **சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷம்** அறிவிக்க வேண்டும் என்பதை தவறாக புரிந்துகொண்டார். நம் **தமிழ்** வேத புத்தகத்தில் சர்வ சிருஷ்டி என்ற வார்த்தைக்கு **மூல** பாஷையிலும் **ஆங்கில** வேதத்திலும் Nations என்றுதான் மொழி பெயர்த்துள்ளார்கள். **நேஷன்ஸ்** என்றால் **தேசங்களை** குறிக்கும். ஐயா அவர்கள் இத்தனை பட்டங்களை டிகிரிகளை எடுத்திருந்தாலும் **ஆங்கில** வேதத்தை தமிழ் வேதத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கவில்லை என்று நினைக்கிறேன். இந்த **நவீன பிரசங்கத்தை** பிரசங்கித்த பிரின்சிபால் ஆகிய நீங்களே என்றாவது ஒருநாள் உங்கள் வேதாகம **கல்லூரியில்** உள்ள **மரங்களோடு** பேசியிருக்கிறீர்களா?. **இயேசு இரத்தம் சிந்தி** மரித்து **உயிர்தார்** என்ற **சுவிசேஷத்தை** அந்த மரங்ளுக்கு அறிவித்திருக்கிறீர்களா? அப்படி அறிவித்து அந்த மரம் **பாவ மன்னிப்பு** பெற்று **மனம் தரும்புதலின்** அனுபவத்தை **பெற்றுள்ளதா?** ஒரு நாளும் பவ மனனிப்பை மரங்கள் பெற முடியாதே ! தயவுசெய்து இனி எங்கும் இப்படிப்பட்ட செய்தியை கூற வேண்டாம்.

மனுஷனுக்கும் **உயிர் உண்டு** – மரத்துக்கும் **உயிர் உண்டு.** ஆனால் மனிதனுக்கு

மட்டுமே **ஜீவன், ஆத்துமா** உண்டு. இவைகள் **மரத்துக்கு இல்லை. மிருகங்களுக்கும்** இல்லை. அதனால்தான் சபை ஆராதனைக்கு **மனிதர்கள்** மட்டுமே வருகிறார்கள். தன்கூட ஆராதனையின் பிரசங்கம் கேட்க **நாயை** யாரும் கூட்டிவருகிறதில்லை அல்லது **மரத்தோடு** யாரும் பேசுவதும் இல்லை. நான் இப்படி **பொது மேடையில்** பகிரங்கமாக பொதுமக்களின்முன் பிரசித்திபெற்ற பெரும் **பட்டதாரியான** உங்கள் செய்திக்கு மறுப்பு செய்தியாக பேசவே இத்தனை நேரம் எடுத்துக்கொண்டேன். ஒரு வேளை **இந்த செய்தியை** நான் என் பிரசங்கத்தின் முடிவில் செய்திருந்தால் ஒன்று நான் பிரசங்கத்தை முடிக்கும் முன் நீங்கள் எழுந்து போய்யிருப்பீர்கள். மக்களும் சிலர் எழுந்து போயிருப்பார்கள். அதனால் என்ன சம்பவித்திருக்கும் **உங்கள் பிரசங்கத்தை** கேட்ட மக்கள் **மரத்துக்கு** சுவிசேஷம் அறிவிக்க போயிருப்பார்கள். **பயித்தியக்காரர்களைப்போல மரத்தின்முன் சுவிசேஷம்** அறிவிக்க நிற்பார்கள். ஆகவேதான் நீங்கள் கோபித்துக் கொண்டாலும் சரி, இந்த **கூட்டத்தை** ஏற்பாடு செய்து **என்னை அழைத்தவர்கள்** இனி டாக்டர் அவர்களை **எந்த கூட்டத்துக்கும் அழைக்கக்கூடாது** என்று முடிவெடுத்தாலும் சரி, **சத்தியத்தை சத்திமாக** அறிவிக்கத்தான் கர்த்தர் என்னை இந்த ஊழியத்தில் இத்தனை வருடமாக உபயோகித்துக்கொண்டிருக்கிறார் என்று கூறி முடித்தேன்.

கூட்டம் முடிந்த உடன் **தலைமை தாங்கியவர்** என் கையை பிடித்து மிகச் சரியாய் விளக்கினீர்கள். உண்மையில் நானும் **எந்த மரத்தோடும்** சுவிசேஷம் அறிவித்ததில்லை. ஏதோ இத்தனை திரளான கூட்டத்தில் **ஒரு புதுமையான கருத்தை** யாரும் கூறாத **கருத்தை கூறுவோம்** என்ற பெருமையில் கூறிவிட்டேன். நீங்கள் விளக்கியது மிகவும் சரியானது. உங்கள் **துணிவை** நான் பாராட்டுகிறேன் உண்மையில் **நீங்கள் ஒரு ஜாமக்காரன் தான்** என்று கூறி மேடையை விட்டு இறங்கி போனார்.

கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்களும் டாக்டர் அந்த பிரின்சிபல் பேசும் போது அவர் நவீன செய்தி **எங்களுக்கும் கோபம்** உண்டாக்கியது. நல்ல வேளை உங்கள் பிரசங்கத்தில் அவர் தவறை தெளிவு படுத்திவீட்டீர்கள். கர்த்தர் தொடர்ந்து இதே மாதிரி நல்ல தைரியமான **ஜாமக்காரனாக** உங்களை உபயோகிப்பாராக என்று வாழ்த்தினார்.

☐ இந்த நிகழ்ச்சியை எதற்கு கூறினேன் என்றால் **மேற்கு வங்க முதல்வர்** கூட்டத்தில் பேசும்போது இந்திய பிரதமர் என்று **பயப்படாமல்** அவர் **தவறை** அந்த பொது கூட்டத்திலேயே உலக மீடியாக்கள், TV நிலையத்தினர் அத்தனை பேர் முன்பாக **பிரதமரின் தவறை** சுட்டிக்காட்டியது சரித்திரத்தில் **எழுதப்பட வேண்டியதாகும்.**

☐ சமீபத்தில் வட இந்தியாவில் ரயிலில் பிரயாணப்பட்டு வந்த கொண்டிருந்த **கத்தோலிக்க சபை கன்னியா ஸ்திரிகள்** சிலர் கிறிஸ்தவ பாடல்கள் பாடியபடி

அமர்ந்திருந்தனர். அமர்திருந்தவர்களை திடீர் என **காவி படை RSS கூட்டம்** சூழ்ந்துகொண்டு அவர்களை **அடித்து துன்புறுத்தி ஜெய் ஸ்ரீராம்** என்று கூற சொன்னார்கள். அவர்கள் மறுக்கவே **கன்னியாஸ்திரி** அணியும் அவர்களின் யூனிபார்மை எல்லார் முன்பாகவும் அவிழ்த்து **வேறு உடுப்பை** மாற்றுங்கள் என்று கூற அவர்கள் அதற்கும் மறுத்தார்கள். அவர்கள் மருத்ததால் அடுத்த பெரிய ஸ்டேஷனில் ரயில் நின்ற உடன் இறங்கிவிடவேண்டும் என்றார்கள். ஸ்டேஷன் வந்தது அவர்களை வலுக்கட்டாயமாக ரயிலைவிட்டு இறக்கி ஸ்டேஷனில் **ஜெய் ஸ்ரீராம்** என்று முழக்கமிட ரயிலில் இருந்தவர்கள் எல்லாரும் இறங்கி **ரயிலை போக விடாமல் தடுத்து** RSS **காரர்களின்** கொடுமையை **ரயில்வே போலீஸிடம்** அறிவிக்க போலீஸ் வந்தது. ஆனால் அவர்களும் **ஜெய் ஸ்ரீராம்** என்ற இரண்டு வார்த்தையை சொல்வதால் நீங்கள் என்ன குறைந்துவிடவா போகிறீர்கள் என்று அவர்களுக்கே போலீஸ் சாதகமாகபேச, **உயிர் போனாலும்** வேறு தெய்வங்களின் பெயரை நாங்கள் **உச்சரிக்கமாட்டோம்.** நாங்கள் **நீண்ட தூரம்** பயனம் செய்ய வேண்டியவர்கள் எங்களை நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும் என்று போலீஸிடம் கூற **ரயில் பயனிகளும்** இவர்கள் பிரச்சனையினால் ரயில் ஒரு மணிநேரம் தாமதமாகிவிட்டது என்று சத்தமிட்டார்கள். ஒரு வழியாக மறுபடியும் அவர்கள் ரயிலில் ஏறி **அமர்ந்து அழுதுகொண்டே** கேரள அரசுக்கும் போலீஸ்க்கும் தகவல் அறிவித்தார்கள். இந்த பிரச்சனை **கேரள மக்க**ளை வெகுவாக பாதித்தது **கன்னியாஸ்திரி** கள் எல்லாரும் சேர்ந்து ஊர்வலம் நடத்தினார்கள். கேரள முதல்வர் திரு. **பிரனாய் விஜயன்** அவர்களும் சம்பவத்தை கண்டித்து பிரதமருக்கு கடிதம் எழுதினார்கள். ஆனால் மத்திய அரசின் பிரதமர் அந்த RSS காரர்கள்மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

வடஇந்தியா எங்கும் இதே நிலை RSS, **காவி கட்சியினரால்** கிறிஸ்தவ சபைகளுககு தொல்லைகள் தொடர்ந்து நடைபெற்றக்கொண்டிருக்கிறது. வட இந்தியாவில் ஒரு சிறிய ஊாரில் ஆராதனை நடந்து கொண்டிருக்கும் போதே **ஒரு கூட்டம்** கிறிஸ்தவ ஆலயத்தில் புகுந்து **அனுமன் சிலையை** நடுவில் வைத்தது எல்லாரும் **ஜெய் ஸ்ரீராம்** சொல்லும்படி வற்புறுத்தி **நாற்காலி சிலுவை** எல்லாவற்றையும் அடித்து நொருக்கினார்கள்.

வட இந்தியாவில் மற்றொரு இடத்தில் ECI சபையில் இப்படி பிரச்சனை நடந்தபோது பிஷப் எஸ்றா சர்குணம் அவர்களும் உண்ணாவிரதம் இருந்தார். **மத்திய மந்திரி** வந்து அவரை சமாதானப்படுத்தினார். ஆனால் இந்த பிரச்சனை இப்போதும் ஓயவில்லை. இந்த சம்பவம் நடந்து சில வருடம் கழித்து நம் பாரத பிரதமரே கொல்கத்தா நகரில் **அரசாங்க நிகழ்ச்சியில்** ஜெய் ஸ்ரீராம் என்று கூட்டத்தினரை பார்த்து கூறச்சொன்னால் RSS போன்ற **இந்துமத தீவிரவாதிகளுக்கு** இன்னும்தான் தைரியம் வரும். அதை தொடர்ந்து **மத கலவரமும்** உண்டாகலாம் அல்லவா !

இந்தியா பண்முகம்கொண்டது ஆயிரக்கணக்கான **மதங்களும்.** ஆயிரக்கணக்கான **தெய்வங்களை தொழுபவர்களும்** உண்டு. அவரவர்களுக்கு அவரவர் **மதம் தெய்வத்தின் மேல் உள்ள நம்பிக்கை** வித்தியாசப்படும். இது **சுதந்திர நாடு** யாரும் **எந்த தெய்வத்தையும்** வணங்கலாம் ஆனால் யாரையும் கட்டாயப்படுத்த உரிமையில்லை. தடுக்கவும் உரிமையில்லை.

## வைராக்கியம் – வெறி

ஒருவருக்கு அவர் வணங்கும் **தெய்வத்தின்மேல்** அல்லது **மதத்தின்மேல் வைராக்கியம்** இருக்கலாம் – **அது தவறல்ல** ஆனால் **பிரதம**ர் போல **RSS காரர்போல வெறி இருக்கக்கூடாது. வெறி ஆபத்தானது. கல்கத்தா முதல்வர்** தைரியமாக பிரதமரின் இந்துமத **தெய்வ வெறியை** பொதுமக்கள் முன் சுட்டிக்காட்டியதால்தான் அவர் **அவமானப்பட்டு** மேடையிலிருந்து இறங்கி வெறியேறினார். அந்த பெருத்த அவமானம் தனக்கு ஏற்பட்டதை பிரதமர் ஒரு பாடமாக கருதி அவர் தன்னை **திருத்திக்கொள்ளாவிட்டால்** மேலும் பல இடங்களில் **பிரதமர் அவமானப்பட** வேண்டி வரும்.

என் பத்திரிகை **மத்திய அரசாங்கத்தினால்** டில்லியில் **ரிஜீஸ்டர்** (பதிவு) செய்யப்பட்டதாகும். ஒவ்வொரு மாதமும் **ஜாமக்காரன்** தமிழிலும், **மலையாளத்திலும்** வெளியிட்டதில் இருந்து **ஒவ்வொரு பாஷையில் ஒவ்வொரு பத்திரிகை** வீதம் மாதா மாதம் டெல்லி **தலைமை அலுவலகமான** நியூஸ்பேப்பர் **டிபார்ட்மென்டுக்கு** அனுப்பி வைக்கப்படுகிறது. அவைகளை **வாசிக்க** ஒரு **தனி அலுவலகம்** இயங்கிக்கொண்டிருக்கிறது. **என் ஜாமக்காரனும்** அவர்களால் வாசிக்கப்பட்டு என் மேல் **நடவடிக்கை எடுப்பார்களேயானால்** அந்த பிரச்சனைகளை சந்திக்க நான் தயாராக இருக்கிறேன். **தமிழ்நாட்டில்** அல்லது **கேரளத்தில்** உள்ள RSS. BJP கட்சியினர் நான் எழுதிய இந்த செய்தி காரணமாக என்னை **தாக்க வருவார்களேயானால்** அதையும் **எதிர்கொள்ள தயாராக இருக்கிறேன்.** எல்லாவற்றுக்கும் **துணிந்துதான் கடந்த 52 வருடங்களாக** இந்த **ஜாமக்காரன் பத்திரிகை** நடத்திக்கொண்டு வருகிறேன்.

**இவர்களைவிட** எனக்கு **கிறிஸ்தவ** ஊழியர்க்காரர்களாலும் அவர்களுடைய **விசிரிகளாலும்தான்** ஆபத்து அதிகம். காரணம், அவர்களின் தவறுகளை நான் **சுட்டிக்காட்டி ஜாமக்காரன்** வாசகர்களை எச்சரிக்கிறேன் அல்லவா. அதன் **கோபம்** வெறுப்பு இவைகள் யாவும் **வெறியாக மாறி** என்னை தாக்க காத்திருக்கிறார்கள். இப்போதைக்கு இந்த கொரோனா அவர்களை தடுத்து நிறுத்தியிருக்கிறது.

- ☐ **ஜெபத்தில் பெயர்களை அழைக்கும்** ஊழியர்களை **பொய்யர்கள்** என்கிறேன். **ஜெபத்தில் வியாதிகளின் பெயரை** கூறி கர்த்தர் காட்டினார் என்று கூறுபவர்களை **கள்ள ஊழியர்கள்** என்கிறேன்.

**அன்னிய பாஷை** என்ற பெயரில் உளரும் அத்தனை **பெந்தேகோஸ்தே சபை** பாஸ்டர்களையும், சபை மக்களையும் அவர்கள் **பொய்யாய் உளருகிறார்கள்** என்கிறேன். ஜெபிக்கும் போது கர்த்தர் **சில பெண்களின் பெயர்களை** எனக்கு **அடிக்கடி காட்டுகிறார்** என்று சத்தியம் TV சேனலில் வரும் நிகழ்ச்சிகளிலும் , ஏஞ்சல் TV சேனல் நிகழ்ச்சிகளிலும் அந்த ஊழியர்கள் பேசும் கூட்டங்களிலும் இப்படிப்பட்ட பொய் தீர்க்கதரிசனங்களை கூறும் **ஊழியர்களை மாய மாலக்காரர்கள்** என்கிறேன். மேலும் அவர்களை யாரும் நம்ப வேண்டாம் என்கிறேன்.

**தங்க கட்டிகளை** வீட்டில் **ஒளித்து வைத்த ஊழியரை,** 125 **கோடிகளை கல்லூரி கெஸ்ட் ரூமில்** ஒளித்து வைத்த **ஊழியரை,** வருமான வரி துறையினர் கண்டுபிடித்து கைது செய்ய **சம்மன் அனுப்பி** பிடிபடாமல் தப்பித்த **ஊழியரை** கருப்பு பண **திருடர்கள்** என்கிறேன்.

**மனைவி பிள்ளைகள்தன்கூட** இருக்க மற்ற பெண்களை வைப்பாட்டியாக வைத்து ஆராதனை முடிந்தவுடன் அந்த **கள்ள வைப்பாட்டியின் வீட்டுக்கு** சென்று ஓய்வு எடுக்கும் **பிஷப்மார்களை** பெயரும் விலாசமும் கூறி **புகைப்படத்தோடு** வாசகர்களுக்கு அறிவித்து அவர்களிடம் **எச்சரிக்கையாக** இருக்க சொல்கிறேன்.

**பிஷப்மார்களின்** பிள்ளைகள் சபைக்குவரும் பெண்களிடம் தவறாக நடந்து கொள்வதையும், டையோசிஸ் தெரிந்தெடுக்கும் **லே செயலர்கள்** டையோசிஸ் **பணத்தையும் டையோசிஸ் நடத்தும் மிஷனரி ஸ்தாபனத்தின்** காணிக்கை பணத்தை கொள்ளையடிப்பவர்கள் எல்லாரையும் சேர்த்து இவர்களெல்லாம் **ஏலியின் புத்திரர்** என்றேன்.

இப்படியெல்லாம் நான் எழுதுவதால் இவர்கள் யாவரும் என்னை கொஞ்ஜுவார்களா ? பல்லை கடிப்பார்களா? ஒரு பக்கம் RSS தீவிரவாதிகள், மற்றொரு பக்கம் **என் கிறிஸ்தவ சபை** தலைவர்களும், **நிர்வாகிகளும்,** கிறிஸ்தவ **சபை ரௌடிகளும்** என் மேல் ஒரு கண்ணை வைத்துள்ளார்கள். **உன்னதமானவரின் மறைவில்** நான் இருக்கிறேன் என்ற தைரியம் மட்டும் என்னை நிம்மதியாக தூங்க வைக்கிறது. **கொரோனா** என்னை படுக்க வைத்து **என் மூச்சை நிறுத்த முயன்றாலும்** அதுவாகவே **தோற்று பின்வாங்கியது.** அதோடு என்னை எல்லா விதத்திலும் தாங்கும் எனக்காக ஜெபிக்கும், என்னை புரிந்துகொண்ட வாசகர்களின் ஜெபம், என் ஜெபத்தோடு இணைந்து எனக்கு பாதுகாப்பு அரனாக இருக்கிறது.

கர்த்தருக்கே மகிமை உண்டாகட்டும்.

2021 மார்ச் மாத ஜாமக்காரனில் 3வது பக்கத்தில் வெல்லூரில் இயங்கும் மரித்த வில்லியம் பிரன்ஹாம் என்ற அமெரிக்க ஊழியரின் சபையினரைப்பற்றி எழுதினேன். அதற்கான விமர்சன கடிதம்தான் நீங்கள் கீழே வாசிப்பது.

# கேடுகெட்டதனமாக நீங்கள் எழுதியிருக்கிறீர்கள்..

அமெரிக்காவை சார்ந்த **தீர்க்கதரிசியும்** ஏழாம் சபை தூதனுமான **வில்லியம் பிரன்ஹாம்** பற்றி முட்டாள்தனமாகவும் கேடுகெட்டதானமாகவும் ஜாமக்காரனில் நீங்கள் எழுதியிருக்கிறீர்கள்.... மரித்த வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் வேதத்தில எழுதப்பட்ட **லவோதேகேயாவின் சபையின் தூதன்** ஆகும். அவர்கள் செய்தி புத்தகத்தை வாசிக்காமலே எப்படி அது தவறான உபதேசம் என்று உங்களால் முடிவு பண்ண முடியும்..... இவரும் **அப்போஸ்தலர் கொடுத்த** ஞானஸ்நானத்தை போதித்தார். அப்போஸ்தலர் **கொடுத்த ஞானஸ்நானம் தவறு** என்று உங்கள் ஜாமக்காரனில் எழுத உங்களுக்கு தைரியமுன்டா?

உங்களைப்போல் **பிரன்ஹாம்** பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்படாத **திருத்துவ தேவனையும், திரியேக தேவனையும்** போதிக்கவில்லை.

| ***சபைகள்*** | ***தூதர்கள்*** |
|---|---|
| எபேசு | பரி. பவுல் |
| சிமர்னா | இரணியஸ் மிஷனரி |
| பெர்கமு | மார்டீன் |
| தியத்திரா | கொலம்பஸ் |
| சர்தை | மார்டின் லூத்தர் |
| பிலதெல்பியா | வெஸ்லி |
| ***லவோதிக்கேயா*** | ***வில்லியம் பிரன்ஹாம்*** |

இவைகளுக்கெல்லாம் என்ன அர்த்தம் எனக்கு விளங்கவில்லை மேலும் **லியாவின் ஆவி** உலகத்துக்குள் **ஐந்து முறை** வர வேண்டும். அதன்படி கீழே உள்ளதை வரிசையாக வாசியுங்கள். என்று எழுதியிருக்கிறார்.

1) எலியா

2) எலிசா

3) யோவான் ஸ்நானகன்

4) இரண்டு சாட்சிகள்

(மோசே – எலியா)

5) எலியாவின் அவி 5வது முறையாக இனிதான் வரவேண்டும்.

தயவுசெய்து மற்ற ஊழியர்களை குற்றம் சொல்லாமல் உங்களை திருத்திக்கொள்ளுங்கள்.

இதை எழுதியவர் **வில்லியம் பிரன்ஹாம்** உபதேசத்தை பின்பற்றியே (கவிழ்ந்து போனவர்) **பால் ஆசீர் லாரி** என்பவரின் மகன் **ஆசீர்பால்** என்பவர் ஆகும். பால் ஆசீர் லாரி என்பவர் யார் என்று வாசகர்கள் அறிவீர்கள். ஜாமக்காரனில் எழுதியும் இருக்கிறேன்.

மேலே வாசித்த வேதத்தில்இல்லாத, வேதத்துகன்கு சம்பந்தம் இல்லாத இந்த விஷயங்களை எந்த புத்தகத்திலிருந்து எடுத்தார்களோ தெரியவில்லை. இவர்களுக்கு வேத புஸ்தகம் வழிகாட்டியல்ல. **வில்லியம் பிரன்ஹாம்** அவர்கள் **பிரசங்கமும்** அவர் எழுதிய **புஸ்தகமுமே** இவர்களை நரகத்துக்கு நேராக வழி நடத்துகிறது. இப்படிப்பட் உபதேசத்துக்கும், ஊழியர்களிடமும் ஜாக்கிறதையாக இருங்கள். இவர்கள் இயேசுவின் உபதேசமாகிய பிரா. குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கற்பித்த உபதேசத்துக்கு எதிரானவர்கள். ஜாக்கிறதை !

சகோ. பால் ஆசீர் லாரி என்பவர் தமிழ்நாட்டில் சுகமளிக்கும் மிகப் பெரிய கூட்டம் நடத்திய முதல் தமிழர் ஆவார். திடீரென்று அசுத்த ஆவி அவரின் உள்ளே புகுந்தது. தன்பெயரை **லகரி கிருஷ்ணன்** என்று மாற்றிகொண்டார்.

**நான்தான்** இயேசு – **நான்தான்** நாராயணன் – **நான்தான்** அல்லா. என்றார். நான் எல்லாவுமாய் இருக்கிறேன். ஆகவே அவரவர் மதத்தைவிட்டு மாறாமல் **லகரி கிருஷ்ணன் லாரி**யாகிய என்னை மனதில் நினைத்தால் போதும். நான் நேரில் உங்களிடம் வருவேன், சுகம் தருவேன் என்று கூறினார். அதோடு சரி **அவர் ஊழியம் நின்று போனது.** 1964ம் வருடங்களில் இவர் Bro பால் ஆசீர் லாரி என்று அழைக்கபட்டு மிக சிறப்பான சுகமளிக்கும் ஊழியத்தை செய்தவர். தமிழ்நாட்டில் **முதல் சுகமளிக்கும்** கூட்டத்தை நடத்திய பெருமை இவரைதான் சேரும். இவர் கூட்டத்தில் சுகம் பெற்றவர்கள் ஏராளம். திடீரென்று இவருள் பிசாசு புகுந்தது. **பெருமை** வந்தது **பிசாசின் பிடியில்** விழுந்துபோனார். **உபதேசங்கள் மாறியது**. கடைசியில் **நான்தான் கடவுள்** என்று கூறுவதில் வந்து முடிந்தது. இப்படிப்பட்ட **லாரி** என்பவரின் மகன் **ஆசீர்பால்** என்பவர்தான் இந்த **கேடுகெட்ட தனம்** என்ற கடிதம் எழுதிய மஹான். இப்போது கவிழ்ந்துபோன **பால் ஆசீர் லாரியின்** ஸ்தாபனத்தை இவர்தான் பொருப்பெடுத்து நடத்துகிறார். அப்படியானால் இவர் உபதேசம் எப்படியிருக்கும் . பரிதாபத்துக்குரியவர் **பாளையம்கோட்டையிலிருந்து கொண்டு வில்லியம் பிரன்ஹாம்** உபதேசத்தையும், தன் **தந்தையின்** உபதேசத்தையும் பறப்பி வருகிறார். **பால் ஆசீர் லாரி**யின் புகைப்படத்தையும் அவர் உபதேசத்தையும் குறித்து எழுதிய விளம்பர போர்டை **திருநெல்வேலி** ரயில்வே ஸ்டேஷனுக்கு வெளியே இடது பக்கம் பார்க்கலாம். இவர்களுடைய கிளை சபைதான் **வெல்லூரி**ல் இயங்குகிறது. ஆனால் இவர்களுக்கும் **வெல்லூர் சபைக்கும்** உள்ள தொடர்பு அறுந்துபோய் பல வருடமாகிறது. இப்படிப்பட்ட **கள்ள ஊழியர்களிடமும்** சபையினரிடமும் எச்சரிக்கையாயிருங்கள்.

# நல்ல ஆளுமை எது ?



2021 ஏப்ரல் மாதம் தமிழ்நாட்டின் அனைத்து செய்திதாள்களிலும் ஆங்கில பத்திரிகைகளிலும் TV செய்திகளிலும் **கிறிஸ்தவர்ளுக்கு தலைகுனிவு** உண்டான செய்தி என்னவென்றால் இந்தியாவில் தமிழ்நாட்டில் **கோயமுத்தூர் CSI டையாசிஸ் பிஷப் Rt. Rev. தீமோத்தை ரவீந்தர்** அவர்கள் ஆயர்களின் **வருங்கால வைப்பு நிதி** PF **பிராவிடண்ட் பணட்** பணம் **பலகோடி ரூபாய்களை மோசடி** செய்ததாக **பிஷப்போடு** சேர்ந்த **3 நபர்கள்** மீது கோயமுத்தூர் **மாநகர குற்றபிரிவு போலீஸிடம்** பாதிகப்பட்ட **CSI ஆயர்கள்** புகார் அளித்து அவர்கள் யாவரும் விசாரிக்கப்பட்டார்கள். **குற்றச்சாட்டில் உண்மை** உண்டு என்று அறிந்து **பேராயர்,** முன்னாள் **செயலர்** கூட இரண்டு நபர்கள் மீது **நடவடிக்கை எடுக்கப்பட** இருக்கிறது என்று அறிவிக்கப்பட்டது.

வைப்பு நிதி பணத்தில் – PF யில் **மோசடி செய்பவர்கள்** மீது **கிரிமினல் நடவடிக்கை** எடுப்பார்கள். விவரம் என்னவென்றால் எந்த **ஒரு ஸ்தாபனமும்** அது CSI லூத்தரன் **சபைகளானளாலும்,** மற்ற **தொழில் ஸ்தாபனமானாலும்,** பள்ளி **ஆசிரியரர்களானாலும்** அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களானாலும் ஆயர், ஆசிரியரானாலும் அவர்கள் பெயரில் **வருங்கால வைப்பு நிதி** ஒவ்வொரு மாதமும் தவறாமல் அவரவர் பெயரில் உள்ள வங்கி கணக்கில் செலுத்தப்படவேண்டும். ஒவ்வொரு **மாத சம்பளத்திலும்** அந்த ஆயர்கள் , ஆசிரியர்கள், **தொழிலாளர்கள்** ஆகியவர்களின் சம்பளத்தில் **வைப்பு நிதி** பணத்தை **பிடித்ததுபோக** மீதி பணத்தைத்தான் சம்பளமாக கையில் கொடுப்பார்கள். இவர்களின் PF வைப்பு நிதி பணத்துக்காக இவர்கள் சம்பளத்தில் பிடித்த பணத்தை அந்தந்த மாதத்திலேயே வங்கியில் அவரவர்கள் பெயரில் பணத்தை சேர்த்துவிடவேண்டும். ஒரு மாதம்கூட தாமதமாக செலுத்தக்கூடாது என்று சட்டம் கூறுகிறது.

**டையோசிஸில்** நிர்வாக பொருப்பில் உள்ள **செயலாளர், பொருளாளர்** ஆகியவர்கள் அந்த **பணத்தை வங்கியில்** சேர்க்கும் பொறுப்பு அவர்களுடையது. அதை **மேற்பார்வையிட வேண்டியது, விசாரிக்க வேண்டியது** அந்தந்த **பிஷப்** அல்லது கம்பெனியாயிருந்தால் அதன் மேனேஜிங் டைராக்டர் (MD) மேற்பார்வையிட வேண்டும். அப்படி இவர்கள் **மேற்பார்வையிடாததால்** நிர்வாக பொருப்பில் உள்ள **லே செகரட்டரி, பொருளாளர்** இவர்கள் **அந்த பெரும் தொகையை** தங்கள் வங்கி கணக்கில் போட்டு அந்த

பெரும் தொகையை சொந்த இஷ்டத்துக்கு செலவழித்து பலவாரு அந்த பணத்தை அனுபவிக்கிறார்கள். **ஆடிட்டரிடம் கணக்கு காட்டும்போது** உடனே முழு பணத்தையும் எப்படியோ சமாளித்து **வங்கியில் சேர்த்துவிட்டு** கணக்கை **நேர்செய்து விடுகிறார்கள்.** இப்போது வட்டி யாருக்கு சேரும். இந்த நிர்வாகிகளுக்குதான் சேரும்.

**கூட்டு கள்ளர்போல்** பணத்தை இவர்கள் பங்குபோட்டுக்கொள்வார்கள். **ஒரு பங்கு பிஷப்புக்கும் சேரும்.** வேறு சில இடங்களில் **PF பணத்தை** வங்கியில் போடுவதில்லை, ஆலய **ஆராதனை காணிக்கைகளையும்கூட** ஒவ்வொரு **திங்கள்கிழமையே** வங்கியில் சேர்த்துவிட வேண்டும். ஆனால் கிறிஸ்தவ சபை **நிர்வாகிகள்** பல இடங்களில் குறிப்பிட்ட பெரும் தொகையை சேர்க்காமல் **தள்ளு வண்டி** வியாபாரிகளிடமும், **சில கடைக்காரர்களுக்கும்** வார வட்டிக்கும், **மாத வட்டிக்கும், மின்சார வட்டிக்கும்** கொடுத்து **கொள்ளை லாபம்** அடிக்கிறார்கள். இதில் அந்தந்த சபை **ஆயருக்கும் பிஷப்புக்கும்** பங்கு போகிறது என்று கூறப்படுகிறது.

அதனால் இப்படிப்பட்ட பண மோசடிகளைக்குறித்து சபையினர் பிஷப் அவர்களுக்கு **புகார் கொடுத்தாலும்** பிஷப் **நடவடிக்கை எடுப்பதில்லை.** போலீஸில் விசாரனைக்கு வந்தால் முதலில் சபை **பொருளாளரைத்தான்** கைது செய்வார்கள் இதில் **பிஷப்மார்கள் செகரட்டரி,** பிஷப் அல்லது **ஆயர்கூட** தப்பித்துக்கொள்வார்கள். போலீஸில் பொருளாளர் அகப்பட்டால் **பொருளாளர் தன்** சொந்த செலவில் லஞ்ஜ பணம் கொடுத்து **ஜெயிலுக்கு போகாமல்** தப்பித்து வெளியே வருவார்கள். ஆனால் மறற **சபை நிர்வாகிகள்** தப்பித்துக்கொள்வார்கள். இப்படி பல டையோசிஸ்களில் **ஆராதனை காணிக்கைகளிலும் – வைப்பு நிதியிலும்** கையாடல் செய்து பணம் திருடப்பட்டால் ஒருநாள் **ஆயரோ, தொழிலாளியோ** (Retaired) **ஓய்வு பெரும்போது** அவர்களுக்கு பணம் கொடுக்காமல் அலைய விடுவார்கள். எவ்வளவு பரிதாபம் பாருங்கள். இத்தனை காலம் **ஊழியம் செய்து** ஓய்வுபெற்று **நிம்மதியாக வாழவும்** முடியாமல் **எத்தனைபேர்** கண்ணீர்விடுகிறார்கள்.

**மிஷனரி ஸ்தாபனங்களிலும் இதே ஊழல்**

கடந்த வருடம் **பிரபல மிஷனரி ஸ்தாபனத்தில்** மிஷனரி ஓய்வுபெற்றபோது அவருக்கு கொடுக்கவேண்டிய **PF பணத்தில்** முழு தொகையையும் கொடுக்காமல் அலையவிட்டனர். அந்த மிஷனரி ஸ்தாபனத்துக்கு அந்த மிஷனரி 3வது நினைவு கடிதம் எழுதிய **நகல் டாக்டர் புஷ்பராஜ்** ஜாமக்காரன் என்று எழுதியதால் **நிர்வாகிகளுக்கு மிஷனரிமேல்** பெரும் கோபம் உண்டாகி கொடுக்கவேண்டிய மற்ற தொகையும் கொடுக்காமல் கலங்கடித்தார்கள். என் ஜாமக்காரன் ஒழுங்கின்படி அந்த **மிஷனரி ஸ்தாபன** தலைவருக்கும் **பொதுசெயலாளருக்கும்** தனிப்பட்ட முறையில் கடிதம் எழுதினேன். மிஷனரிகளின் PF வைப்பு நிதி தொகையை மாதா மாதம் வங்கியில் அடைத்திருந்தால் இந்த நிலை வந்திருக்குமா ? என்று கேள்வி எழுப்பினேன். அதன்பின் சில வாரங்களிலேயே முழு தொகையை மஷனரியை அழைத்து கொடுத்து அனுப்பினார்கள்.

மேலும் **பெயர்பெற்ற** இந்த மிஷனரி ஸ்தாபனத்தில் **மிஷனரிகள் படும் வேதனை** என்று நான் விவரங்களை **ஜாமக்காரனில்** எழுதினால் என்னவாகும் என்று யோசியுங்கள் என்று என் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். அதற்கு எழுத்தில் பதில் அளிக்காமல் இரண்டே வாரத்தில் அந்த இரண்டு மிஷனரிகளுக்கும் சேர வேண்டிய அத்தனை தொகையையும் அவர்கள் அலுவலகத்துக்கு அழைத்து கொடுத்து தீர்த்தார்கள்.

சபை விசுவாசிகள் **சுவிசேஷம் சீக்கிரம்** பறவ வேண்டும் என்பதற்காக **மிஷனரி பணிக்கென்று** அனுப்பிய பணத்தை **மிஷனரிகளின் தேவைகளை** சந்திக்க பயன்படுத்தாமல் அந்த பணத்தை **ஆலயம் கட்ட செலவிட்டோம்** மற்றபடி நாங்கள் பண மோசடி செய்யவில்லை என்றால் அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா ? அல்லது **கர்த்தர்தான் அங்கீகரிப்பாரா?.**

**ஆசியாவிலேயே** பெரிய **மிஷனரி ஸ்தாபனத்திலும்** ஓய்வுபெற்ற மிஷனரிக்கு பண விஷயத்தில் **அநீதி காட்டப்பட்டதால்** அந்த மிஷனரி துணிந்து **நீதி மன்றத்தின் கதவை தட்டி நிற்கிறார்.** இவ்விவரம் கேட்டறிந்ததிலிலுருந்து என் மனம் மிகவும் வேதனைப்படுகிறது. காரணம் எதுவானாலும் அவரை **நீதி மன்றம் செல்லவிடலாமா?** நான்கு விசுவாசிகள்கூடி பேசி அவரை சமாதானப்படுத்தி இனி அவரின் **ஓய்வு காலங்களை** குடும்பத்தோடு நிம்மதியாக கழிக்க விடலாமே. இப்படிப்பட்ட விஷயங்களில் **சட்டதிட்டங்களை பாரமல்** கிறிஸ்துவின் **அன்பின் அடிப்படையில்** சமாதான ஒப்பந்தத்தின் **அடிப்படையில் எந்த ஒரு மிஷனரியையும் அழ வைக்காமல்** சந்தோஷத்தோடு வீட்டுக்கு அனுப்பி வைக்கலாம். அதுவல்லவா சாட்சி.

**மிஷனரி ஸ்தாபனங்கள்** யாரும் மிஷனரிகளுக்கு சேர வேண்டிய **பணத்திலோ, காணிக்கை பணத்திலோ** ஸ்தாபன நிர்வாகிகள் யாரும் **ஊழல் செய்வதில்லை**. ஆனால் **அலட்சியம், உதாசீனம், கவுரவம் பார்ததால்** பழி வாங்குதல் இதன் காரணமாகவே இப்படிப்பட்ட செய்திகள் வருகிறது. பல **மிஷனரி ஸ்தாபனத்தின்** உள்ளே **பல கொடுமைகள், பழிவாங்குதல்,** பட்சபாதம் காட்டுதல் **ஜாதி அடிப்படையில்** நியாயம் மறுக்கப்படுவது ஏராளம் நடக்கிறது. அவைகள் எதுவும் வெளியே தெரிவதில்லை.

## கோயமுத்தூர் CSI டையோசிஸ்

**இப்போது மறுபடியும் டையோசிஸ் விஷயத்துக்கு** வருவோம். சுமார் 15 வருடத்துக்கு பிறகு 2019 ஆகஸ்ட் முதல் **கோவை திருமண்டலத்தில்** வைப்பு நிதி பணத்தை **வங்கியில்** செலுத்தியிருக்கிறார்கள். 2019ம் வருடத்துக்குமுன் எந்த **ஆயருக்கும்** வருங்கால **வைப்பு நிதி** வங்கியில் பணம் சேர்க்கப்படவில்லை. அதற்குமுன் 15 வருட காலமாக **வருங்கால வைப்பு நிதியை** ஒரு ஆயர் பேரிலும் டையோசிஸ் பணம் செலுத்த வில்லை, அதன் தொகை சுமார் **25 கோடிக்கு** மேல் **பணம் வங்கியில் செலுத்தாமல்** இருக்கிறது. அந்த **கோடிகள்** என்ன ஆனது ? ஆயர்கள் இப்போது **ஓய்வுபெற்றால்** இப்போதுள்ள டையோசிஸ் நிர்வாகம் எப்படி பணம் கொடுத்து ஆயரை அனுப்பப்போகிறது?

**காரணம் யார் ?**

**பிஷப்** அவர்களை கேட்டால் **எனக்கு முன் இருந்த பிஷப் காலத்தில்** அந்த ஊழல் நடந்தது. எனக்கும் அதற்கும் **சம்பந்தம் இல்லை** என்கிறார். கடந்த கால **பிஷப்** தான் காரணம் என்றாலும் அவர் இப்போது டிஸ்மிஸ் செய்யப்பட்டார். அவர் இந்த பிரச்சனையில் சேர்க்கப்படமாட்டார். அதனால் முன்னால் **நிர்வாகிகள்தான்** இந்த ஊழலுக்கு பொறுப்பு. அதனால்தான் முன்னாள் **டையோசிஸ்** செயலாளர் **Rev. சார்லஸ்** பொருளாளர் திரு. **செல்வகுமார்** ஆலோசகர் திரு.**மங்களதாஸ்** இவர்களோடு இப்போதுள்ள பிஷப் **Rt. Rev. தீமோதை ரவீந்தர்** ஆகியவர்கள்மேல் குற்றப்பிரிவு காவல்துறையின் நடவடிக்கை பாய்ந்துள்ளது. ஒரு சில **ஆயர்கள் துணிந்து** இப்படி **காவல் துறையில் புகார்** அளித்ததால்தான் இத்தனைபெரிய கோடிகள் நிறைந்த ஊழல் பெருச்சாளி **வெளியே வந்துள்ளது.**

இப்போதுள்ள பிஷப் Rt.Rev. **தீமோத்தை ரவீந்தர்** அவர்கள் **நல்ல பிஷப்தான் –** ஆனால் – **நல்ல நிர்வாகி இல்லை.** இவர் **பிஷப் பதவி** ஏற்கும்முன் **சினாட்டில்** வேலை – வெளிநாடு களில் அனேக காலம் கடத்தியவர். **ஆலய நிர்வாகத்தில் அனுபவம் இல்லை.** எந்த ஆயராவது இவரை **கொஞ்சம் மிரட்டினாலோ கெட்டவார்த்தைகள்** பேசினாலோ அப்படிப்பட்ட **ஆயர் மேல்** எத்தனை **புகார்கள் நிரூபிக்கபட்டாலும்** நடவடிக்கை எடுக்கமாட்டார் என்று பெரும்பாலான ஆயர்கள் கூற கேட்டிருக்கிறேன்.

இவர் **நீலகிரி** ஆதிவாசிகள் **படுகா இனத்தில்** இருந்து படித்து முன்னேறி பட்டங்கள் பலபெற்று **ஆயர் ஆகி பிஷப்பாக வந்த இரண்டாவது நபர் ஆகும்.** இதே **படுகா** இனத்திலிருந்து **ஆயராகி, பிஷப்பாகி மாடரேட்டர்** ஆனவர்தான் Most Rev. **வில்லியம் மோசஸ்** அவர்களாகும்.

இப்போதுள்ள **பிஷப்** அவர்கள் தனக்கு கொடுக்கப்பட்ட **ஆளுமையை** வானலாவிய **ஆதிகாரத்தை** பயன்படுத்த **தயங்குகிறார்.** இப்படிப்பட்டவர்கள் இப்படிப்பட்ட ஆவிக்குரிய **தலைமை பதவிக்கு லாயக்கற்றவர்கள் ஆகும்**.

- ☐ வேதத்தில் **பிலாத்துக்**கு தன் **ஆளுமை – தன் அதிகாரத்தின்** எல்லை என்ன என்று தெரியும். **இயேசு குற்றம்மற்றவர்** என்பதை மிக நன்றாக அறிவார். கர்த்தர் அவர் **மனைவி மூலம்** எச்சரித்ததையும் அவர் அறிவார். ஆனால் **பெரும்பான்மைக்கு** பயந்துவிட்டார். **இயேசுவை சிலுவையில்** அன்றைய ஒப்பு கொடுத்து **கையை கழுவிவிட்டார்.** தன் அதிகாரத்தை ஆளுமையை உபயோகிக்கவில்லை.

அதே மாதிரிதான் கோவை **பிஷப் தீமோத்தை ரவீந்தர்** அவர்கள் கோவை **டையோசிஸ்ஸில்** 29 ஆயர்களுக்கு கூடுதலாக மேல் குடிகார ஆயர்கள் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றிய **மற்ற குற்றச்சாட்டுகளும்** நிறைய உண்டு அவைகள் எல்லாம் **பழைய பிஷப்** அவர்கள் File செய்து வைத்துள்ளார். அது இப்போது **பிஷப் தீமோத்தை ரவீந்தர்**

வசம் உள்ளது. **திராட்சை** தோட்டத்தை கெடுக்கும் **குழிநரிகளை** முதலாவது பிடித்து **நீக்க வேண்டும்** என்று வேதம் கூறுகிறது. அதை செய்தால் **மற்ற ஆயர்கள்** பயப்படுவார்கள். கோவை திருமண்டலத்தை பரிசுத்தப் படுத் தமுடியும். ஆனால் பிஷப் அவர்கள் **பெரும்பான்மையை** கண்டு **பிலாத்துபோல்** கை கழுவி இப்போது **வெட்கப்பட்டு தனிமரமாக நிற்கிறார்.,**

- ☐ ஏற்கனவே கேரள பிஷப்மார்களுக்கு நான் என் மலையாள ஜாமக்காரனில் விசேஷ ஆலோசேனை எழுதினேன்.

ஒரு ஆயர் **பிஷப்** ஸ்தானத்திற்கு நின்று எலக்ஷனில் ஜெயித்து பொருப்பெடுக்கிறார் என்றால், அது **கர்த்தர் நியமித்ததாக** பலர் நினைததுக்கொண்டிருக்கிறார்கள். அப்படி அல்ல! அது **கர்த்தரால் அனுமதித்தது** என்றுதான் சொல்லவேண்டும்.

காரணம், இப்போது **பிஷப்** பேனலில் ஒரு ஆயருடைய பெயர்வர வேண்டும் என்பதற்காக அந்த ஆயர் **பலருடைய சிபாரிசுகளை** தேடுகிறார்கள். சபையில் உள்ள **முக்கியமான பணக்கார நபர்களை** சந்திக்கிறார்கள். அவர் ஜெயிக்க வேண்டுமானால் **பல ஆயர்களின்** ஓட்டு மிக முக்கியம். ஆகவே ஆயர்களை **நேரிலோ,** தொலைபேசியிலோ பேசி ஆதரவு தேடுகிறார்கள். குறிப்பாக **லே செயலர்களின்** தயவு பிஷப் தெரிநதெடுப்பில் மிக முக்கியம். லே செயலரோ தெரிந்தெடுக்கப்படும் பிஷப் தான் **சொல்லுகிறபடி** பொம்பைபோல **தலை ஆட்டுகிறவர்களாக** இருக்க வேண்டும். **நீட்டுகிற இடத்தில் கையெழுத்து** போடும் அடிமைகளாக இருக்க வேண்டும். **டையோசிஸ் காண்ட்ராக்டர்கள் பணி இடமாற்றம்,** கல்லூரி, பள்ளி ஆசிரியர், **லெக்சரர்** நியமனம் இதில் எல்லாம் **கொள்ளை லாபம்** உண்டு. இந்த லாபங்களை அனுபவிக்க ஒரு **தலையாட்டி பிஷப் ஆவசியம்.** இவர்களையும் மீறி பக்தியுள்ள, ஆவிக்குரிய **ஜெபிக்கிற ஆயர் ஒருவர்** அதிக ஓட்டுவாங்கி **முன்னிலையில்** வந்துவிட்டால் அவ்வளவுதான்.

டையோசிஸில் உள்ள **பெரிய மனிதர்களுக்கு** ஒரு **வெறி வந்துவிடுகிறது.** நீயா, நானா பார்த்துவிடுவோம் என்று சினாட்டில் **கோடிக்கணக்கில் பணம்** கொடுத்து முன்னிலையில் உள்ள அதிக ஓட்டு வாங்கியவரை **மெரிட் என்ற** பெயரில் அவரை தள்ளிவிட்டு **மூன்றாவதாக வந்த** ஆயரை பிஷப்பாக நியமிக்கப்படுகிறார். இப்படிப்பட்ட **வெட்கக்கேடு** இனியும் நடக்காமல் இருக்க **டையோசிஸ்ஸில்** உள்ளவர்களே சிலராக இணைந்து ஒரு குறிப்பிட்ட ஆயரை பார்த்து ஐயா நீங்கள் டையோசிஸ் பிஷப்பாக வந்தால் சபைகள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர ஏற்பாடு செய்வீர்கள். பண ஊழல் நடைபெறாமல் **உங்களால் பார்த்துக்கொள்ள முடியும்** என்று சபை **மக்கள், ஆயர்கள்** ஏகோபித்து ஒரு ஆயரை **கேட்டுக்கொண்டால்** அதிலேதான் **ஆசீர்வாதம் உண்டு.**

ஒருவேளை நீங்கள் பிஷப்பாக தெரிந்தெடுக்கப்பட்டால் **தவறான அநியாயமான** காரியங்களுக்கு **கமிட்டியோ, லே செயலரோ செயல்படும்படி** உங்களை

கட்டாயப்படுத்தினால் அது வசனத்துக்கும் கர்த்தருக்கும் விரோதமான காரியமானால் **யோசிக்காமல்** அச்செயலுக்கு **சம்மதிக்கவும்** வேண்டாம் . **கையெழுத்தும்** போடவேண்டாம்.

டையோசிஸ்ஸின் சட்டத்தில் **ஒரு பிஷப்** கமிட்டிக்கும் **டையோசிஸ் மக்களுக்கும்** எதிராக செயல்பட்டால் அவர் தன் இஷ்டம்போல் **சர்வாதிகாரியாக** செயல்பட்டால்கமிட்டியினர் சேர்ந்து **நம்பிக்கையில்லா தீர்மானம்** மூலம் அந்த **பிஷப்பை நீக்கலாம்.** அப்படித்தான் சபை சட்டம் கூறுகிறது. அதை சினாட்டுக்கு அறிவிக்க வேண்டும். அப்படி யாரும்செய்ததில்லை. இதுவரை எந்த டையோசிஸ்ஸிலும் செய்ததில்லை.

நீங்கள் உண்மையாக நடந்தும் **நம்பிக்கையில்லா** தீர்மானம் கொண்டுவந்து உங்களை நிர்வாக கமட்டி நீக்க முயன்றால் நீங்களாகவே **பிஷப் பதவியை ராஜினாமா** செய்து சபையின் **சாதாரண ஆயராக** ஊழியம் செய்யுங்கள் இதை **கவுரவ பிரச்சனையாக** எடுக்க வேண்டாம். **அவமானமாகவும்** கருத வேண்டாம். அதை பெருமையாக கருதுங்கள். அதில் உங்களுக்கு மன நிம்மதியுண்டு.

மரித்த **வடக்கு கேரளா பிஷப்** Rt. Rev. குருவில்லா அவர்களின் பொருப்பில் உள்ள **மூனாரு** என்ற இடத்தில் சபை எல்லையில் மரம் வெட்டி லாரிகளில் கொண்டு போன வழக்கில் DFO வன அதிகாரியால் **அனுமதிக்கப்பட்ட** மரங்களின் எண்ணிக்கைக்கு மேல் அதிகமாக மரங்களை **வெட்டி பல கோடிகளுக்கு விற்றது** ஒரு பெரிய **கிரிமினல் குற்றம் அகும்**, அடுத்தது DFO வன உயர் அதிகாரி கொடுத்த **மரம் வெட்டும் உத்தரவும் காலாவதியாகி பல மாதங்கள ஆகிறது.** காட்டு **வன அதிகார சட்டம்** மிகக் கடுமையானது. மரங்களை வெட்ட முன் நின்றது டையோசிஸ் **செயலர், பொருளாளர்,** டையோசிஸ் **மேனேஜர்,** ஆனால் **கைது வாரண்ட் பிஷப்புக்குதான் வந்தது.** பிஷப் நீதிமன்ற **குற்றவாளி கூண்டில்** நிற்கிறார். அபராதம் **10 கோடி கட்ட வேண்டும்** என்று **நிதிபதி தீர்ப்பு** கூறினார். யார் **அந்த 10 கோடியை** கட்டுவது. டையோசிஸ்ஸால் ஆயர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலை அதனால் Rt.Rev. குருவில்லா அவர்களுக்கு ஸ்ரோக் வந்து கை, கால் செயலிழந்து வாய் பேச முடியாமல் போனது. இந்த வழக்கில் **பிஷப்புக்கு சம்பந்தமில்லை.** டையோசிஸ் செயல்பாடுகள் எல்லாம் **பிஷப் பெயரில்தான்** இருக்கிறது.

நீதிமன்றத்தில் பிஷப் சொன்ன பதில் என்ன தெரியுமா. நான் **உயர் பதவியில்** இருக்கிறேன். எனக்கு **கீழ் உள்ள அதிகாரிகள்,** நீட்டின இடத்தில் அவர்களை நம்பி கவனிக்காமல் **கையெழுத்து இட்டேன்** என்றார். ஆனால் நீதிபதி அவர்களின் பதில் பிஷப்பை தலைகுனிய வைத்தது. உங்கள் பார்வைக்கு வராமல் இத்தனை பெரிய கிரிமினல் காரியங்கள் நடந்துள்ளன. ஆனால் நீங்கள் **எனக்கு தெரியவில்லை, நான் கவனிக்கவில்லை** என்று கூறுவது உங்கள் **பெரிய பதவிக்கு அழகல்ல.** டையோசிஸ்சை **நிர்வகிக்க இயலவில்லையானால்** பிஷப் **பதவியை ராஜினாமா** செய்து விடுவது நல்லதல்லவா என்றார்.

☐ கோயமுத்தூர் டையோசிஸ் டிஸ்மிஸ் செய்யப்பட்ட **பிஷப் துரை** அவர்கள் எனக்கு எழுதிய கடிதம் இப்போதும் வைத்திருக்கிறேன், அதில் அவர் கூறியது டையோசிஸ்ஸில் 29 ஆயர்கள் **மதுபானத்துக்கு** அடியானவர்களும், **பெண் விஷயத்தில் அகப்பட்டவர்களும்** உண்டு. ஆனால் நான் எத்தனை பேரை நான் **டிஸ்மிஸ் செய்வேன்.** அதற்கு மாற்றாக ஊழியத்தில் அமர்த்த ஆயர்களுக்கு எங்கு போவேன். சபை இவர்களால் **பரிசுத்தம் கெடுகிறது** உண்மை, **வாலிப பிள்ளைகள்** ஆயர்களின் நடவடிக்கை கண்டு ஆவிக்குரிய ஜீவயத்தில் வளர முடியவில்லை. உண்மைதான். என்னால் என் ஆயர்களை **தண்டிக்கவோ,** ஊழியத்திலிருந்து **நீக்கவோ முடியாது** என்றார்.

நான் அவருக்கு எழுதிய கடைசி பதில் கடிதத்தில் **உங்களால் நிர்வாகத்தை** சீர்படுத்த முடியாது என்று நீங்களே ஒத்துக்கொண்டீர்கள். அதற்கு உங்கள் **பிஷப் பதவியை** ராஜீனாமா செய்து **முன் மாதிரியக வாழுங்கள்.** அப்படி செய்யாவிட்டால் ஆயர்களின் சாட்சிகெட்ட நிலை **உங்களையே திருப்பி அடிக்கும்.** உங்கள் பிள்ளைகள் கூட பாதிக்கப்படலாம். என்றேன்.

நான்கு வார்த்தையில் அந்த பிஷப் எனக்கு பதில் எழுதினார். நீங்கள் உங்கள் ஊழியத்தை செய்யுங்கள் **பிஷப்பாகிய** என் நிர்வாகத்தில் **தலையிட** உங்களுக்கு **அதிகாரம் கொடுத்தது யார்? என் மகள்** விஷயத்திலோ **என் குடும்ப விஷயத்திலோ** இனி நீங்கள் தலையிட கூடாது. என் குடும்ப விஷயத்திலும், டையோசிஸ் விஷயத்திலும் இனி **எந்த ஆலோசனையும் எனக்கு எழுதவேண்டாம்** என்றார். அதோடு சரி, அதன்பின் நான் அவர் விஷயத்தில் தலையிடுவதில்லை. ஆனால் **அவர் மகளுக்கு** நேர்ந்த அவமானம் **மேட்டுப்பாளையம்** குன்னூர் விவரங்கள் யாவும் வாசகர்களாகிய நீங்கள் அறிவீர்கள். **பிஷப் கைது செய்யப்பட்டார் சினாட்டால் டிஸ்மிஸ் செய்யப்பட்ட** ஒரே பிஷப் **துரை** அவர்கள் தான் என்பதையும் அறிவீர்கள். பாலிடெக்னிக் பண ஊழலில் அவர் உடன்பிறந்த சகோதரரும் மிக முக்கிய காரணம்தான். ஆனால் அவர்கள் யாரும் உதவி செய்யவில்லை. அவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை. அவர்கள் போலீஸில் அகப்படவில்லை. பிஷப் மட்டுமே அகப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

அந்தபடியே இப்போதைய **கோயம்முத்தூர் டையோசிஸ்** பிஷப் அவர்களுக்கும் நான் **வயதில் முதிர்ந்தவன்** என்ற நிலையிலும் **80 வருடம் என் தகப்பனார் காலத்திலிருந்து** CSI **சபை அங்கத்தினர்** என்ற உரிமையிலும் கூறுகிறேன். வேத வசனம் கூறுகிறது சங். 143 -10 **கர்த்தாவே உம்மை பிரியப்படுத்த என்னை போதித்தருளும்.** மனிதர்களை நீங்கள் பிரியப்படுத்த முயலாமல், அந்த ஊர்காரர்கள், இந்த ஊரை சேர்ந்த ஆயர்கள் அதிகம்இருக்கிறார்கள். **பெரும்பான்மை ஆயர்கள்** என்ற எண்ணிக்கையில் தீர்மானிக்காமல் நீங்களாக தைரியமாக முடிவெடுங்கள், உங்கள் அதிகாரத்தை தைரியமாக பயன்படுத்துங்கள்.

**வருங்கால வைப்பு நிதியை** குறித்து நீங்கள் பிஷப் பொருப்பு எடுக்கும் போதே **இத்தனை கோடி ரூபாய் வைப்பு நிதி பணம்** வங்கியில் அடைக்கபடவில்லை என்பதை வெளிப்படையாக புகார் கடிதம் எழுதி **குற்றப்பிரிவு** போலீஸ்க்கு தகவல் கொடுத்திருக்கவேண்டும். அதற்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்பதை நம் டையோசிஸ் **மாத பத்திரிகையில்** வெளியிட்டிருக்கலாம். இப்போதுள்ள சட்டப்படி **ஓய்வு பெற்றவர்களையும்** நீதிமன்றத்துக்கு அழைத்து அவரின் தவறுக்கு **தண்டனை கொடுக்கலாம்** என்று கூறப்படுகிறது. இப்போது பழைய **செயலர் பொருளார்** இவர்கள்தான் **குற்றவாளிகள்.** அத்தனை **கோடியையும் இவர்கள்தான் அடைக்க வேண்டும்.**

ஆனால் நீங்கள் பொருப்பேற்றபின்னும் நீங்கள் பொருப்பேற்ற காலத்திலிருந்து போத்தனூர் **ஆயர் புகார் கொடுத்த காலம் வரை** வைப்பு நிதி **வங்கியில் பணம் போகவில்லை.** மாநகர குற்றப்பிரிவு போலீஸார் நடவடிக்கை எடுக்க பேசிறார்கள் என்று அறிந்தவுடன் அவசர அவசரமாக **வைப்பு நிதி பணத்தை வங்கியில்** அடைத்ததாக கேள்விப்பட்டேன். அதுவும் இத்தனை பெரிய டையோசிஸ் ஆயர்களின் PF பணம் மொத்தம் **45 ஆயிரம் ரூபாய் மட்டும்தான்** வங்கியில் உள்ளது. ஆகவே இவைகளை பதவி ஏற்ற ஒவ்வொரு மாதமும் விசாரித்திருக்க வேண்டும். **பிரதான நிர்வாகியான** பிஷப் அவர்களின் **மெத்தனம்,** நிர்வாகத்திறன் இல்லாமை ஆகியவைகளை இந்த சம்பவத்தின் மூலம் அறிய முடிகிறது.

**பிலாத்துக்கு** தன் வானலாவிய (ஆளுமையாக) **அதிகாரத்தின்** எல்லை எவ்வளவு என்பதை அறிவார். ஆனால் **குற்றமற்ற இயேசுவை** விடுவிக்காமல் **பெரும்பான்மை மக்களின் எண்ணத்துக்கு** விட்டுக்கொடுத்ததால் **நீதிபதியே கர்த்தர்முன் பெரும் குற்றவாளியாகிவிட்டார்.**

- நான் CSI சபை அங்கத்தினன் மட்டுமல்ல, **மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற பத்திரிகை ஆசிரியர்** ஆகும். ஆகவே நான் **என் பத்திரிகையில் கட்டுரை, பிரசங்கமும்** எழுதுவேன். **விமர்சனமும்** செய்வேன். அந்த வகையில்தான் இந்த ஜாமக்காரனில் **ஆளுமை – அதிகாரம்** என்ற தலைப்பில் இவைகளை எழுதி விமர்சிக்க வேண்டியதாயிற்று.

**பிலாந்து** இயேசுவை முகாந்தரம் இல்லால் தண்டித்து தன்**ஆளுமையை** நஷ்டப்படுத்தினான்.

பிஷப் அவர்கள் தன் **ஆளுமை – அதிகாரத்தை** சரியாக பயன்படுத்தாமல் **நம்பிக்கை மோசடி – கூட்டு சதி – மோசடி** என்ற பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டால் **இயேசுவின் சரீரமாகிய திருச்சபை** அவமானத்தால் தண்டிக்கப்பட போகிறது.

**பவுல் தன்** நிருபத்தில் எழுதும்போது **சபை மக்களைப்பார்த்து** உங்களில் **விபச்சாரம் உண்டென்று** கேள்விப்படுகிறேனே. **பிரம்பை** கொண்டு வரவேண்டுமா ? என்று பள்ளிக்கூட வாத்தியார் போல கோபித்து சபையை கண்டிக்கிறார்.

இனியாவது உங்கள் அதிகாரத்தை பயன்படுத்தி நம் திருமண்டலத்தில் **களைகளை** பிடுங்கி எரியுங்கள். **குழி நரிகளை** பிடித்து சபை என்ற திராட்சை தோட்டத்திலிருந்து நீக்குங்கள்.

ஆயர்களுக்கு பஞ்ஜம் இல்லை. **முழுபட்டம் வாங்காத** அரைபட்டதோடுள்ளவர்கள் நம் டையோசிஸ்சில் உண்டு. அவர்களை ஆயர்கள் ஆக்கி காலி இடத்தை பூர்த்தி செய்யுங்கள்.

உங்களுக்கு இந்த பிஷப் பதவியை அனுமதித்த கர்த்தருக்கு மட்டுமே பயப்படுங்கள். கர்த்தருக்கு முன் குற்றமற்ற நிலையில் நிற்கிறீர்களா என்று உங்களை பரிசோதியுங்கள். கர்த்தரிடமிருந்து சாலமோன்கேட்டதுபோல் **நிர்வாகம் செய்ய எனக்கு ஞானம் தாரும்** என்று கேளுங்கள். உங்களால் சபை சட்டப்படி, அரசாங்க சட்டப்படி திருமண்டலத்தை நிர்வாகம் செய்ய முடியவில்லை என்றால் **விருப்ப ஓய்வில்** பிஷப் பதவியிலிருந்து விலகிவிடுங்கள். அது உங்களுக்கும். உங்கள் ஆத்துமாவுக்கும் நல்லது, சபைக்கும் நல்லது. ஜெபிக்கிறேன், செய்திகளை கேட்டதிலிருந்து உங்களுக்காக பெருத்த மனவேதனையோடு ஜெபிக்கிறேன். நான உங்களை நேசிக்கிறேன். கர்த்தரின் கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

சபையின் தலையாகிய இயேசு கிறிஸ்துவை சந்தோஷப்படுத்தவும், அவர் சித்தத்தை செய்யஆசைபடுபவர்க்கு மட்டும்தான் இந்த ஆலோசனை பொருந்தும்.

## பாஸ்டர் **ஜோசப்** அவர்கள் கர்த்தருக்குள் மரித்தார்



சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே **செட்டிப்பட்டி** என்ற இடத்தில் உள்ள **கிறிஸ்துநாதர் ஆலயம்** சபையின் **ஸ்தாபகரும் – தலைமை போதகருமான** பாஸ்டர் ஜோசப் அவர்கள் தனது 71ம் வயதில் கொரோனாவில் பாதிக்கப்பட்டு கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

பாஸ்டர் ஜோசப் அவர்கள் செட்டிப்பட்டியில் உள்ள **குஷ்டரோக ஆஸ்பத்திரியில்** பணி செய்துகொண்டே மாலை நேரத்தில் வீடுவீடாய் சந்தித்து இயேசுவைப்பற்றி அறிவித்த உண்மையான ஊழியர். அவரால் சந்திக்கப்பட்ட ஆத்துமாக்களைகொண்டு ஒரு சிறிய சபையை உருவாக்கினார். இன்று அது வளர்ந்து பல கிராமங்களில் ஏராளமான சபைகள் உருவாக காரணமாக அமைந்தது.

அனேக ஆண்டுகளுக்குமுன் **Dr. புஷ்பராஜ்** ஆகிய நானும், **சாது செல்லப்பா**, பாஸ்டர் **ஹென்றி ஜோசப்** அவர்களும் இணைந்து அவரை பாஸ்டராக அபிஷேகித்தோம். உடனே தன் வேலையை ராஜினாமா செய்து **முழு நேர பணிக்கு** தன்னை ஒப்புக்கொடுத்தார். அவரின் ஏழ்மை நிலையை கண்டும் அவர் உண்மையான ஊழியத்தை கண்டும் டேனிஷ்பேட்டை **பெத்தேல் ஐக்கியம்** ஸ்தாபகர் சகோ. P. சாம் அவர்கள் பல வருடங்கள் நெல் மூட்டைகளை கொண்டுவந்து அவர் வீட்டில் கொடுத்து பட்டினியில்லாமல் அவர் ஊழியம் செய்ய ஏற்பாடு செய்தார். அப்போது நானும் உடன் இருந்தேன். பாஸ்டர் ஜோசப் அவர்கள் என்னை மிகவும் நேசிப்பார். அவர் ஆரம்பித்த **சபைளுக்காக** அவர் **பிள்ளைகளுக்காக** ஜெபிக்கிறேன்.

## இயேசு கிறிஸ்துவின் இரத்ததால் கழுவப்பட்டவர்கள் கிருபை பெற்றவர்கள்

வேதத்தில் கர்த்தர் **இஸ்ரவேல்** மக்களை **என் ஜனங்கள்** என்றார்.

ஆனால்

இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு மனம் திரும்பிய **கிறிஸ்தவ மக்களை** என் **புத்திரர்கள்** (பிள்ளைகள்) என்கிறார்.

அவருடைய நாமத்தில் விசுவாசித்து அவரை (இயேசுவை) ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் **தேவனுடைய புத்திரர்கள்** எனப்படுவார்கள்.

என் ஜனங்கள் என்ற வார்த்தைக்கும், **என் பிள்ளைகள்** என்ற வார்த்தைக்கும் உள்ள வித்தியாசம் இயேசுவை ஏற்றுக்கொண்டு மனம் திரும்பி இரட்சிக்கப்ட்ட நாம் **அப்பா** என்று கர்த்தரை அழைக்கும் **புத்திர சுவிகாரம்** பெற்றவர்கள் ஆகிறோம்.

**MAY-2021**

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.